நன்றி - நூலகத்திட்டம்

# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI புதிய பூமி

சுற்று 06 யூன்/யூலை 1999 பக்கம் 8 விலை ரூபா 10/= சுழற்சி 29

## 83' யூலையின் இருண்ட நாட்கள் மீண்டும் வேண்டாம். யுத்தம் - இனவாதத்திற்கு எதிராக அணிதிரள்வோம்!


### யுத்தத்தை-தனியார் மயத்தை வழிநடாத்தும்

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும்!


கடந்த இருபத்தியொரு வருடங்களாக நாட்டையும் மக்களையும் நாசப்படுத்தி வரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்படல் வேண்டும். அதற்குப் பதிலாக அனைத்து உழைக்கும் மக்களுக்கு, தேசிய இனங்களுக்கு உரிய உரிமைகளும், சமத்துவமும் வழங்கி உத்தரவாதப் படுத்தும் புதிய அரசியலமைப்பு ஒன்று தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

1978ம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தமக்கிருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்டு அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமையைக் கொண்டு வந்தது. இலங்கையின் கேடுகெட்ட பிற்போக்குவாதியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியுமான ஜே.ஆர், தன்னைத்தானே ஜனாதிபதியாக்கிக் கொண்டு சகல அதிகாரங்களையும் தனது கைகளுக்கு எடுத்துக் கொண்டார்.

அதன் விளைவாக நாடு தாராள பொருளாதாரக் கொள்கைக்காக அந்நிய பல்தேசியக் கம்பனிகளுக்கு திறந்து விடப்பட்டது. அந்நிய மூலதனத்திற்கு சுரண்டல்காரர்களுக்கும் சிறப்பு உரிமைகளும் பாதுகாப்பும் வழங்கப்பட்டதுடன் அந்நியப் படைகளை வரவழைக்கும் அதிகாரம் கூட ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.









அதேவேளை தொழிற்சங்க – ஜனநாயக – மனித உரிமைகள் மறுக்கப்பட்டு வேலை நிறுத்தங்கள், எதிர்ப்புக்கள் யாவும் துப்பாக்கி முனையில் முறியடிக்கப்பட்டன. இவற்றுக்கும் மேலாக பேரினவாதம் அரசியல்–ராணுவ மயப்பபடுத்தப்பட்டு தேசிய இனப்பிரச்சினை யுத்தமாக விஸ்தரிக்கப்பட்டது. அமெரிக்க பிரித்தானிய இஸ்ரேலிய ராணுவ ஆலோசனை வழிகாட்டல் உதவி என்பனவற்றின் மூலம் தெற்கிலும் வடக்கு கிழக்கிலும் பல்லாயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் மக்கள் என்போர் இதுவரை கொண்டுறொழிக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கெல்லாம் அன்று முதல் இன்று வரை ஜனாதிபதியின் தனிநபர் அதிகாரங்களே பயன் படுத்தப்பட்டன. நாட்டின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஜனாதிபதியின் ஆணைக்காக காத்து நிற்கும் தனிநபர் சர்வாதிகார நிலையை ஜனாதிபதி ஆட்சிமுறை ஏற்படுத்திக் கொண்டது. எனவே நாட்டின் யுத்தத்திற்கும், தனியார் மயத்திற்கும் ஏனைய பொருளாதார அரசியல் சமூக கலாச்சார சின்னாபின்னத்திற்கும் காரணமாக அமைந்து காணப்படும் ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என வற்புறுத்துவது அவசியமாகின்றது.

ஆனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை தனி ஒரு சட்டத்தின் நிறைவேற்றத்தோடு ஒழித்துவிடக் கூடிய ஒன்றல்ல. அது இன்றைய அரசியலமைப்போடு பின்னப் பிணைந்த ஒன்றாகவே இருந்து வருகின்றது. அப்படியானால் முழு அரசியலமைப்பும் மாற்றப்பட வேண்டும். அவ்வாறு மாற்றப்படும் போது தாராள பொருளாதாரக் கொள்கைக்கும் அது ஏற்படுத்திய தனியார் மயத்தையும் தடுத்து நிறுத்தக் கூடிய அரசியல் அமைப்பாக இருத்தல் வேண்டும். தொழிலாளர்களின் உரிமகளைப் பாதுகாப்பதற்குரிய அடிப்படை உத்தரவாதங்களை அவ் அரசியல் அமைப்பு வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இதே போன்று தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை வழங்கக் கூடியதாக அவ் அரசியல் அமைப்பு அமைதல் வேண்டும். பேரினவாதத்தின் சின்னமாக விளங்கும் தேசியக் கொடி மாற்றியமைப்பதில் ஆரம்பித்து தேசிய இனங்களுக்கு அவர்களது பாரம்பரிய பிரதேசம், மொழி, மதம், கலாச்சாரம் என்பனவற்றின் தனித்துவங்களையும் தன்னடையாளங்களையும் சமத்துவ அடிப் படையில் வழங்கக் கூடிய அரசியல் அமைப்பு ஒன்றே நாட்டிற்கு இன்று தேவைப்படுகிறது.

எனவே ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றப்படவேண்டின் அரசியலமைப்பு மாற்றம் பெற வேண்டும். அவ்வாறு மாற்றம் பெறும் அரசியலமைப்பில் தாராளமயம் – தனியார்மயம் போன்றவற்றை நிராகரித்து தொழிலாளர் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் தொழிலாளர் சாசனத்தை உள்ளடக்க யூ.என்.பியினர் தயாரா? தேசிய இனப்பிரச்சினைக்கான அதிகாரப் பரவலாக்கலுக்கு அவர்கள் இணங்குவார்களா? வடக்கு கிழக்கை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்னும் அடிப்படையில் அவர்களுக்குரிய சுயாட்சி உரிமைகள் அரசியலமைப்பில் உத்தரவாதம் செய்யப்படுவதை ஜே.வி.பி யினர் ஏற்றுக் கொள்வார்களா? அவர்கள் மலையக மக்களது தனித்துவங்கள் பேணப்படுவதையும் முஸ்லீம் மக்களது

தொடர்ச்சி 7ம் பக்கம்

## அமெரிக்கத் தளபதிக்கு இங்கு என்ன வேலை

அமெரிக்க ராணுவத்தின் பசுபிக் பிராந்தியத்திற்கான உயர் தளபதி ஜெனரல் எட்வின் சிமித் யூலை 21ம் திகதி இலங்கைக்கு வருகிறார் என செய்திகள் தெரிவிக்கின்றன. அவரை இங்கு வரவழைத்தவர்களும் ஆலோசனை நநடாத்த இருப்பவர்களும் யாராக இருக்க முடியும். ராணுவத்தலைமைப் பீடமும் அதன் அமைச்சரான பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவுமே இருக்கமுடியும். இந்த அழைப்பும் ஆலோசனையும் அரசாங்க உயர் மட்டத்தின் முடிவேயாகும். அப்படியானால் யுத்தம் தொடரப்பட உள்ளது என்பதே அர்த்தமாகும்.

இங்கு வருகை தரும் அமெரிக்க தளபதி வடக்கு கிழக்கின் யுத்த நிலவரங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து ஆலோசனை நடாத்த உள்ளதாகவும் அறிய முடிகிறது. முப்படைகளின் தளபதிகள், கூட்டுப்படை நடவடிக்கைக்கான தளபதி மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தப்பட உள்ளன. நிச்சயமாக அமெரிக்கத் தளபதி இலங்கையில் இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான ஆலோசனையிலா ஈடுபடப்போகிறார். இல்லவெ இல்லை. அவரது முழுக் கவனமும் யுத்தத்தை விரிவாக்கி எப்படி அதனை முன்னெடுப்பது என்பதற்கான ராணுவத் திட்ட ஆலோசனைகளாகவே அமைந்து கொள்ளும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

பசுபிக் பிராந்தியத்தின் பரந்த நில, நீர்ப்பரப்பில் நாற்பத்தி மூன்று நாடுகளைக் கண்காணிக்கும் ராணுவத் திட்டங்களின் தளபதி நமது நாட்டில் யுத்தத்தை வலியுறுத்திக் ககொள்வதன் பின்னணி எவரும் விளக்கக் கூடியதே. தென் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் அக்கறை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றன. அண்மைய காஷ்மீர் – கார்கில் யுத்த்தில் அமெரிக்காவின் . நரித்தனமான உள்ளார்ந்த தலையீடு உலகம் அறிந்ததே. அதற்கும் பின்னால் நீண்டதிட்டம் தென் ஆசியாவைப் பொறுத்து நிகழ்ச்சி நிரலாக உள்ளது. எனவே இலங்கை ஒரு முக்கிய கேந்திர நிலையமாக அமெரிக்காவிற்கு அரசியல் பூகோள அடிப்படையிலும் ராணுவ மூல உபாய ரீதியிலும் அவசியப்படுகிறது. இதற்கு நமது நாட்டின் ஆளும் தரப்பினர் பலியாகி வருகின்றனர். புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதிகள் என அமெரிக் அறிவித்ததன் மூலம் அரசியல் தீர்வை எட்டவிடாது யுத்தத்திற்கு எண்ணெய் வார்த்து தனது நோக்கங்களை அதன் ஊடாக அடைய தீவிரமாகி நிற்கிறது. அதன் வழியில் ஒரு முக்கிய கட்டமாகவே பசுபிக் பிராந்திய தளபதி இங்கு வருகை தருகிறார். அவருக்கு இங்கு என்ன வேலை என்று கேட்பது நியாயமாகாதுதான். ●

## மலையக இளைஞர் – யுவதிகள் 300 பேர் சிறைகளில்!

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் அவசரகாலச்சட்டத்தின் கீழும் 300 மலையக இளைஞர்–யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். களுத்துறை, மகசீன், வெலிக்கடை, போகம்பறை, பூசா ஆகிய சிறைகளிலும் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளளனர். நுவரெலியா, கண்டி, பதுளை, கொழும்பு மாவட்டங்களிலிருந்தே அதிகமான மலையகத்தவர்கள் கைசெய்யப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கு மக்களுடன் தனிப்படவோ பொதுநோக்கங்களுக்கோ தொடர்புடையவர்கள் அவ்வாறு தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதற்காகவும் பேரினவாதிகளின் பொய்யான தகவல்களின் அடிப்படையிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆகக் கூடிய காலம் 5, 6 வருடங்களாகவும், குறைந்தது 6, 7 மாதங்களாகவும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களை சில் மலையக அரசியல்வாதிகள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். ஆனால் அரசியல் ரீதியாக உருப்படியான எவ்வித நடவடிக்கைகளையும் அவர்களால் எடுக்க முடியவில்லை.

சட்ட ரீதியாகவும் கூட உதவிகள் ஏதும் கிடைக்காத நிலையில் இம் மலையக இளைஞர் – யுவதிகள் சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருக்கின்ற ஒருசில மனித உரிமை அமைப்புகளும், சில தனிப்பட்ட சட்டத்தரணிகளும் தவிர போதிய அளவு சட்டஉதவிகள் மலையக இளைஞர்களுக்கு கிடைப்பதில்லை. இவ்வாறான, விவகாரங்களில் தலையிடும் போது உரிய கட்டணத்தை அறவிட முடியாது என்பதாலும் பொலிசாருடனும் பேரினவாதிகளுடனும் முரண்பட வேண்டியிருக்கும் என்பதாலும் பெரும்பாலான மலையக சட்டத்தரணிகள் இதில் அக்க்றையற்றிருக்கின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டு மலையக இளைஞர்களில் பலர் மிகவும் மோசமான சித்திரவதைக் குள்ளாகியுள்ளனர். நாட்டிலுள்ள இனவாத, யுத்தக் சூழ்நிலையால் மலையகத்தவர்களும்

தொடர்ச்சி 7ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகமும் பேரினவாதமும்

மலையகம் இன்று பேரினவாத இயக்கங்களின் புகலிடமாக வளர்ந்து வருகின்றது. அண்மைக் காலங்களில் அது தனது பார்வையை மலையக மக்கள் மீதும் தமிழர்களின் மீதும் காட்ட ஆரம்பித்துள்ளது. தற்போது எங்கு பார்த்தாலும் பேரினவாதிகளின் போஸ்டர்களும் பதாதைகளையும் காணக் கூடியதாகவுள்ளது. மலையகத்தில் மலையக மக்களின் தலைமைகளிலிருந்து மக்களை பிரித்து வேறாக்கி சுயலாபம் காணும் முயற்ச்சியாகவே அண்மைக் கால செயற்பாடுகள் அமைந்துள்ளன. அது தனது பிரசுரங்களில் மலையக தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டுதல் செய்யவும் முனைகின்றது. இவ்வமைப்புக்கு பல பெரும் பான்மையின அமைச்சர்களதும், சில தனவந்தர்களதும் ஆசீர்வாதம் கிடைப்பதுடன், தமிழ் மக்களுக்கு எதிரான அரச யுத்தத்திற்கு ஒரு வரப்பிரசாத அமைப்பாகவும் திகழ்கிறது.

தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி நடத்த விரும்பும் வீரவிதான இயக்கம் பரந்த அளவில் தமது காரியாலயங்களை அமைப்பதற்கும் செயற்படுவதற்கும் எதிராக எது வித நடவடிக்கையும் எடுக்காதது ஆட்சியில் உள்ள சிலரது விருப்பத்தினாலேயே என்றும் அறிய முடிகிறது.

மலையகத்தில் இவ்வமைப்புக்கள் வளர்வதற்கு எமது மலையக மக்களின் பிரதிநிதியாக இருந்தவர்களும், இருப்பவர்களும் ஓர் காரணமாக உள்ளமையை மறுக்க முடியாதது. ஏனெனில் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கெதிராக இனவாதத்தை கட்டி வளர்த்த அரசாங்கத்தில் தமது அற்ப சுக போகங்களுக்காக மக்களை காட்டிகொடுத்து விலை போனதுடன் அக் கட்சிகளின் இனவாதத்திற்கு எதிராக செயற்படாததும் இன்று மலையக மக்களை நிர்க்கதி நிலைக்கு தள்ளியுள்ளது. அண்மை காலங்களில் நடைபெற்ற வன்முறைகளின் போது மலையக மக்கள் ஆயுதம் ஏந்துவார்களாயின் அதற்கான முழு பொறுப்பும் சிங்கள வீரவிதான இயக்கத்தையே சாரும் என மலையக எம்.பிக்களின் முழக்கம் மலையக மக்களை சந்தேக கண்கொண்டு பார்க்கும் நிலைக்கு தள்ளியுள்ளது. ஏற்கனவே பெரிய கெடுபிடிகளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாச்சும் கதையாகவே இந்நடவடிக்கை அமைந்துள்ளது. தமது அரசியல் லாபங்களுக்காக முழக்கமிடும் இவர்கள் மக்கள் படும் அவலங்களை அனுபவிக்காமல் இருப்பதே முக்கிய காரணம்.

யூ.என்.பி ஆட்சியில் அமைச்சு பதவிகளில் இருந்தமையால் அதன் இனவாத சக்திகளுக்கு துணை போனதுடன் தற்போது (பதவியில்) ஆட்சியில் இருக்கும் பொ.ஐ.மு.மின் யுத்தம் பற்றியோ, இரத்தினபுரி பசறை சம்பவங்களையிட்டோ கவலைப் படாத எமது எம்.பிக்கள் தமது மேதினத்தில் குழப்படி ஏற்பட்டவுடன் இனவாதிகள் இருப்பதாகவும் அச்சுறுத்துவதாகவும் முழக்கமிடுவது கேலிக்கும் நகைப்புக்குரிய விடயமாகவே தோன்றுவதுடன் இதுவும் எரியும் கூரையில் பிடிங்கிய மட்டும் இலாபம் தேடும் முயற்சியாகவே தோன்றுகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் இது சம்பந்தமாக மக்கள் தெளிவாத சிந்திப்பது மிகவும் அவசியம். எந்த ஒரு நாட்டிலும் திறந்த பொருளாதாரத்தின் கீழ் இவ்வாறான பிற்போக்கு வாதிகளின் இயக்கங்கள் வளர்வது தவிர்க்க முடியாதது. இப் பிரச்சினைபற்றியும் இலங்கையின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாகவும் மக்களுக்கு தெளிவு படுத்துவது முற்போக்கு வாதிகளதும் மக்கள் நலன் விரும்பிகளதும் தலையாய கடமையாகின்றது. எனவே இலங்கை வாழ் சகல சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் வெகுஜன இயக்கங்களில் ஒன்றுபடுவதன் மூலம் இதற்குரிய சரியான பதில் இறுக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகின்றது.

**மத்துரட்ட கதீர**

# மன்னாரில் பாலியல் வல்லுறவுக் கொலை!

மன்னாரில் பள்ளிமுனைப் பகுதியில் 12-07-99 அன்று இளம் யுவதி ஒருவர் கொடூர பலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு இறுதியில் கொலை செய்யப்பட்டுள்ளார். 21 வயதுடைய ஜடா கமாலிட்டா என்னும் இளம் யுவதிக்கே இக்கதி ஏற்பட்டுள்ளது. அவ் யுவதியின் மார்பகம், உதடுகள் பற்களால் கடிக்கப்பட்டும், வயிற்றில் கத்தியால் குத்தப்பட்டும், அவரது பெண் உறுப்பு துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாக்கப்பட்டும் உள்ளன. மூர்க்கத்தனமான பாலியல் வல்லுறவுக்கு அவ் யுவதி ஆளாக்கப்பட்டிருப்பதை பிரேத பரிசோதனை மூலம் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெறித்தனத்தைச் செய்தவர்கள் பள்ளி முனை காவலரணில் இருந்த ராணுவத்தினர் என்றே நம்பப் படுகிறது. அன்று கிரிஷாந்தியை பாலியல் வல்லுறவும் கொலையும் செய்து புதைத்தார்கள். ரஜனியை அவ்வாறு செய்து மலக்குழியில் மறைத்தார்கள். பின்பு கோணேஸ்வரியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி பெண் உறுப்பில் வெடிகுண்டை வெடிக்கச் செய்து கொன்றார்கள். இப்போது மன்னாரில் ஜடா கமாலிட்டாவை குதறிவிட்டு பெண் உறுப்பில் துப்பாக்கி சூடு நடாத்திக் கொன்றுள்ளார்கள். வடக்கு கிழக்கில் படையினர் போட்டி போட்டு புதுப்புது வகைகளில் பாலியல் வல்லுறவுக் கொலைகளில் சாதனை படைத்து வருகிறார்கள். இவை அனைத்தும் பெண் ஜனாதிபதி, பெண் பிரதமர் ஆளும் நாட்டில் நடக்கும் ராணுவ ஆக்கிரமங்களாகும். பேரினவாதிகளும் அவர்களுக்கு சாமரைவீசும் பத்திரிகைகளும்.இவ் வெறியாட்டத் திற்கு என்ன நியாயம் கூறுவார்கள். ஜனாதிபதியும் பிரதி பாதுகாப்பு அமைச்சரும் இதற்கு உரிய பதில் அளிப்பார்களா? யுத்தத்தில் இவை சகஜம் என சமாதானம் கூறி படையினரின் மனோ நிலையைப் பாதிக்காதபடி பார்த்துக் கொள்வார்களா? யுத்த வெறியர்களோ பேரினவாதப் பிசாசுகளே உங்களுக்கு தாய், சகோதரி, புதல்வியர்கள் இல்லையா?

புதிய பூமி

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

ட்ரொட்ஸ்க்கிசத்தின் பிதா பிலிப் குணவர்த்தனா, 1956ல் புரட்சிகர சமசமாஜக் கட்சி என்ற பேரைக் கைவிட்டார். மஹஜன எக்ஸத் பெரமுனை என்ற பேரில் சிங்கள இனவாத அரசியலில் சறுக்கினார் 1960 ஜுன் தேர்தலில் தோல்வி தந்த விரக்தியால் 1965ல் யூ.என்.பி. ஆட்சியில் சேர்ந்து மந்திரியாக அடையாளம் இழந்தார்.

ட்ரொட்ஸ்கியத்தின் தங்க மூளைக்கார என்.எம்.மற்ற மேதையான கொல்வினுடன் 1963ல் ஸ்ரீ.ல.சு.க ஆட்சியல் பங்காளி ஆக வேண்டி இடதுசாரி ஐக்கிய முன்னணியைக் குழப்பினார். மந்திரிப் பதவிகளுக்காக தொழிலாளி வர்க்கத்தின் 21 கோரிக்கைகளைக் காட்டிக் கொடுக்கவும் தயங்கவில்லை. 1970ல் மந்திரியாக வருவதற்காக கொள்கைகளை ஒவ்வொன்றாகக் கைவிட்டார். 1975ல் பதவியில் இருந்தது விலகும்மாறு நிர்ப்பந்திக்கப்பட்டு ஸ்ரீ.ல.சு.கட்சியைப் பழிவாங்க வேண்டி 1977 தேர்தலில் யூ.என்.பி. வெல்வதற்கு உதவினார் முடிவில் சமசமாஜக் கட்சி அரசியலிலிருந்து ஓரங்கட்டப்படவும் அவரே வழி செய்தார்.

1972க்குப் பிற்கு வாசுவும் விக்கிரமபாகுவும் படிப்படியாக சமசமாஜக் கட்சியிலிருந்து ஒதுங்கி 1978ல் நவசமசமாஜக் கட்சியை உருவாக்கினார்கள். அக் கட்சியில் தனது அதிகாரத்தைக் காப்பாற்ற பல பிளவுகளை ஏற்படுத்தினார் விக்கிரமபாகு. இறுதியாக வாசுவையும் அப்புறப்படுத்தி தன் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டார். பிறகு ஏதாவது பதவியைப் பிடிக்க வேண்டும் என்ற நப்பாசையில் ஜே.வி.பிக்குப் பின்னால் அலைந்து புதிய இடதுசாரி முன்னணியைக் குலைக்கும் காரியங்களில் இறங்கினார். மாகாணசபை உறுப்பினர் பதவி கிடைத்ததும் ஒரு அதிகாரமும் இல்லாத மாகாணசபையில் பேசாமடந்தை சபாநாயகராக வேண்டி யூ.என்.பியின் ஆதரவைப் பெறவும் அவர் கூசவில்லை. இதன் மூலம் புதிய இடதுசாரி முன்னணிக்குள் பிரச்சினையைத் தோற்றுவித்தார் விக்கிரமபாகு. இவரது முன்னோடிகள் எல்லாம் மந்திரிப் பதவிக்காக கொள்கையை விற்றார்கள். இவரோ சில்லரைப் பதவிக்காக சகலவற்றையும் விடத் தயாராகினார்? விக்கிரமபாகு தனது கட்சியை ஜே.வி.பி யில் தொலைக்கப் பார்க்கிறாரா? அல்லது யூ.என்.பி.யில் தொலைக்கப்பார்க்கிறாரா? இது தானா நவ சமசமாஜவாதி என்பதன் அர்த்தம்?

இப்படிக்கு
நம்பி ஏமாந்த
நவ சமசமாஜக் கட்சி ஆதரவாளர்
எம். ராயப்பு
கொட்டாஞ்சேனை
கொழும்பு.

# நாலு நடக்குது உலகிலே

## நூதன இடதுசாரி முன்னணி

புதிய இடதுசாரி முன்னணியின் பெருவாரியான பங்காளிகள் ஐக்கியத்தைப் பேணுவதற்காக மிகவும் பொறுத்துத்தான் போயிருக்கிறார்கள். விக்கிரமபாகு கருணாரத்ன என்கிற தனிநபர்வாதிக்காக இல்லாமல், அவரது கட்சிக்காகப் பல சமயங்களில் அவரது சந்தர்ப்பவாதம், திமிர்த்தனம், தில்லுமுல்லு அரசியல், பதவி மோகம் போன்ற பல விடயங்களைப் பகிரங்கமாகக் கண்டிக்காமலும் விட்டார்கள், ஆனாலும் ஐக்கிய முன்னணி என்றால் தன்னுடைய முன்னேற்றத்துக்கான ஒரு ஏணி என்பதை விட வேறெதாகவும் காண முடியாத ஒருவர் முடிவில் தன்னைத் தானே அம்பலமாக்காமல் போக முடியாது.

புதிய ஜனநாயக கட்சிப் பிரதிநிதியான தோழர் இ. தம்பையாவை செயலாளராக நியமிப்பதை எதிர்த்து முன்பு ஒத்துக்கொண்ட படி ஒரு வருடத்தின் பின்பு பதவி விலக மறுத்து, கூட்டாளிக் கட்சிகள் எல்லாவற்றையும் பகைத்து விட்ட பின்பும் புதிய இடதுசாரி முன்னணி தனதே என்றும் மற்ற எல்லாக் கட்சிக் காரரையும் விரட்டி விட்டேன் என்று ஒரு அறிக்கையும் இல்லையா விட்டிருக்கிறார் மனிதர்!

நவசமசமாஜக் கட்சியில் இருப்பவர்கள் பலரும் அவரது பதவி ஆசை பற்றி மற்றக் கட்சியினரிடம் ஏற்கனவே முறையிட்டுள்ளார்கள். மேலும் புத்தி தெளிந்து அக்கட்சியே அவரை ஒதுக்கினால் கூட, தானே கட்சி, தானே முன்னணி என்று கூறவும் அவர் தயங்கமாட்டார்.

ஐயா விக்கிரமபாகு, ஏனய்யா இவ்வளவு கஷ்டம். ஐயா கூட வருவார் என்றால், குமார் பொன்னம்பலத்துடன் சேர்ந்து ஒரு நூதனமான இடதுசாரி முன்னணியை அமைக்கலாமே! அதில் யூ.என்.பி.யையும் ஜே.வி.பியையும் கூட இணைக்கலாமே! ஒரு சின்னப் பிரச்சினை! தலைவராக ஐயாவை அவர்கள் யாராவது ஏற்பார்களா என்பது தான்!.

## சி.பி.ஐ – சி.பி.எம். – சி.பி.ஜெ.

பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து சோனியாவைப் பதவிக்குக் கொண்டுவருவதற்குக் கூட சி.பி.எம். தலைமை சில மாதங்கள் முன்பு மிகவும் விரும்பியிருக்கிறது. இந்தக் குழப்பம் எல்லாம் எப்படி வந்தது? பாராளுமன்ற அரசியல் காய் நகர்த்தல் மூலம் சோஷலிஸம் வராது என்ற உண்மை மறந்து போனதால் அல்லவா!

பா.ஜ.க. கட்சியைக் கவிழ்க்கலாம். தேர்தலில் வெல்லாமல் ஒரு வேளை இன்னொருமுறை தடுக்கலாம். மீறி வந்தாலும் மறுபடி ஏதாவது வாய்ப்பு வரும்போது கவிழ்க்கலாம். ஆனால் இந்திய சமுதாயம் மாறி விடுமா? உலகமயமாதலும் தாராளப் பொருளாதாரக் கொள்கையும் நின்று விடுமா? சாதிய ஒடுக்குமுறையும் மதவாதமும் போய்விடுமா?

காங்கிரஸ் பா.ஜ.க. இரண்டும் ஒரே விதமான பொருளாதாரக் கொள்கையைத்தான் கடைப்பிடிக்கின்றன. மதச்சார்பின்மை பேரளவில் ஒரு வித்தியாசம் என்றால், நடைமுறை அரசியலில் அது மேலும் பலமாக வேரூன்ற வழி வகுத்தது காங்கிரஸ் ஆட்சி இல்லையா? பா.ஜ.க. பச்சையான மதவாத சாதிவாதக் கட்சி. ஆனால் பா.ஜ.கவை முறியடிக்க முதல் மற்றக் கட்சிகள் இந்து உயர்சாதி ஆதிக்கத்தைப் பகைக்கத் தயாரா? வோட்டுப் பெட்டியில் காகிதம் போட்டு, சாதியமும் மதவெறியும் சாயுமா?

சமூகத்தை மாற்ற வேண்டிய சக்திகள் தம்முள் பிளவு பட்டு மோதுகின்றன. அவைகளை ஒன்றுபடுத்துகிற வேலைக்கும் பாராளுமன்றம் நாடாளுமன்றம் என்று பதவிக்குப் பின்னால் பறக்கிற வேலைக்கும் என்ன சம்பந்தம்? தி.மு.க., ம.தி.மு.க., அ.தி.மு.க. என்று ஒன்று மாறி ஒன்றின் பின்னால் அலைகிற வரைக்கும் சி.பி.ஐயும் சரி சி.பி.எம்மும் சரி உருப்பட்டால் போலத்தான்!

## சேச்சே!

ஜே.வி.பி. குறுவிய சிங்களத் தேசியவாத நிலைப்பாட்டில் இருந்து கொண்டே மாக்சிய வேடம் பூண்டது. பின் 1960களிலும் முன் 70 களிலும் அது தன்னை சேகுவேராவுடன் அடையாளப் படுத்திக் கொண்டது பலரும் அறிந்தது.

கிட்டடியில் ஒரு புலம் பெயர்ந்த முன்னாள் தமிழீழ விடுதலை இயக்கத்தின் வாரிசுகள், மறுபடியும், 6000மைல் தொலைவில் இருந்து தனித் தமிழீழத்துக்காகப் போர் நடத்தப் போகிறார்களாம். அவர்களுக்கும் ஆசான் சேகுவேரா தானாம்!

சேகுவேரா எப்பேர்ப்பட்ட உன்னதமான மனிதர்! ஆர்ஜென்ற்றீனா தேசத்தவரான சே கியூபா புரட்சிக்கு உழைத்தார் பின்பு பொலிவியாவில் போராடி உயிர் நீத்தார். தேசிய எல்லைகள் கடந்த ஒரு விடுதலைப்போராளி, பேரினவாதமும் குறுகிய தேசியவாதிகளும் தங்களது சுய ரூபத்தை மறைக்க உதவுவது எவ்வளவு அபத்தமானது!

## மிலோஷொவிச்சின் நண்பர்கள்

யூகோஸ்லாவியாவின் இன்றைய நெருக்கடிக்குத் தீர்வு என்ன தெரியுமா? சேர்பிய பேரினவாதத்தால் 1991ல் பிளவுபடத் தொடங்கி இன்று 5 நாடுகளாகி விட்ட யூகோஸ்லாவ் சமஷ்டிக் குடியரசை மீள உருவாக்குவதுதானாம். இது ஜே.வி.பி. தலைமையின் அற்புதமான ஒரு கண்டுபிடிப்பு என்று நினைக்காதீர்கள். பொஸ்னியாவில் சேர்பிய தேசியவாதிகளது முஸ்லீம் விரோதக் கொடுமைகளை எல்லாம் நியாயப்படுத்திய ஒரு ட்ரொட்ஸ்கிய இயக்கம் இருக்கிறது. அவர்களுடைய ஞானம் ஜே.வி.பிக்கு ஏற்றதாக இருப்பதில் நியாயம் உண்டு. அங்கு சேர்பிய மேலாதிக்கத்திற்குட்பட்ட அகண்ட யூகோஸ்லாவியா இங்கு சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழான இலங்கை. மிலோஷொவிச் ஒரு சோஷலிஸ வாதியென்று ஜே.வி.பி. சொல்கிறது. ஜே.வி.பி. தலைவர்களுடன் ஒப்பிட்டால் அதுவும் நியாயமாகத் தான் இருக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI புதிய பூமி

S-47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## மலையக இளம் தலைமுறையினருக்கு

*அடுத்த நூற்றாண்டினை பல எதிர்பார்ப்புகளுடன் எதிர்கொள்வது பற்றி பரவலாகக் கலந்துரையாடப்படுகிறது. முடியப்போகின்ற நூற்றாண்டின் சாதனைகள் பற்றி மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. எதிர்கால எதிர்பார்ப்புகளும், கடந்தகாலம் பற்றிய மதிப்பீடுகள் என்பனவற்றை வெறும் சம்பிரதாயங்கள் என்று ஒதுக்கிவிட வேண்டியதில்லை. அக்கடமையில் இளம் தலைமுறையினரின் பங்கு மிகவும் அதிகமானதாகவே இருக்கமுடியும்.*

*இலங்கையின் சூழ்நிலையில் எல்லா இளைஞர் யுவதிகளையும் பொதுமைப்படுத்தி பார்த்த முடியாது. தேசிய இனத்துக்கு தேசிய இனம் இளம் தலைமுறையினரின் தரம், பயன்பாடு போன்றன வித்தியாசமாகவே இருக்கிறது. இதிலும் குறிப்பாக மலையக இளம் தலைமுறையினர் ஒப்பிட்டளவு ஏனைய தேசிய இனங்களின் இளைஞர் யுவதிகளை விட பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர். இதற்கு அவர்களின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு சூழ்நிலைகள் காரணம் என்று பொதுவாக கூறலாம். அவற்றை மாற்றி மலையக இளைஞர் யுவதிகளின் பின்தங்கிய நிலையை போக்க வேண்டுமானால் குறிப்பாகவும் நுட்பமாகவும் பல விடயங்களை மலையக சமூகம் தன்னளவிலும் பொதுவாக இலைங்கையர் சமூகமும் அணுகவேண்டியும் கையாள வேண்டியும் இருக்கிறது.*

*இருக்கும் பாராளுமன்ற தொழிற்சங்க தலைமைகளைக் கொண்டு அவற்றின் பதவிகளைப் பாவித்து பின்தங்கிய நிலைமைகளை முழுமையாக போக்க முடியும், சமூகத்தை மாற்ற முடியும் என்ற நம்பக்கையுடை சிலர் இருப்பதை அவதானிக்க முடிகிறது.*

*பின்தங்கிய நிலைமைகளை போக்கிவிட்டால் அல்லது குறைந்துவிட்டால் போதும் என்றும் அதற்கு பாராளுமன்ற தொழிற்சங்கப் பதவிகளுக்காக பரிகாரம் காணமுடியும் என்று நம்புபவர்கள் சிலர் இருக்கின்றனர். மேற்படி குறிப்பட்ட இரண்டுவகையினரும் மலையகத்தில் ஸ்திரமாக இருக்கின்ற பிற்போக்கு அரசியலுக்கு சப்பை கட்டுபவர்களாகவே இருக்கின்றனர்.*

*மேற்படி மூன்று விதமான போக்குகளை விட வித்தியாசமான போக்கொன்றும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. அதுதான் மலையக மக்களின் பெரும்பான்மையான தொழிலாளர்களின் வர்க்கத் தேவைகளிலிருந்து பிரச்சினைகளை அணுகுகின்ற முறை. இப்போக்கிற்கு ஈர்க்கப்படுபவர்களில் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் இப்போக்கில் இயங்குவது சிரமமானதாக இருந்தாலும், மிகவும் காத்திரமானதாகவே இருக்கிறது.*

*பாராளுமன்ற, தொழிற்சங்க நிலைப்பாட்டினால் சமூகத்தின் தேவைகளுக்கு மேற்பூச்சுக்களை செய்யமுடியுமேயன்றி மாற்று வழிமுறைகளை கண்டறியவோ, ஸ்திரமிக்கவோ முடியாது. இதனால் மக்களுக்கு நடைபெறமுடியாத ஒன்று பற்றி அதிகளவான நம்பிக்கையை கொடுக்க முடியுமேயன்றி மக்களின் பிரச்சினைகளை தீர்க்க நீண்ட கால வழிமுறைகளில் அவர்களை பங்காளிகளாக்க முடியாது.*

*இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை மட்டும் கவனித்தில் கொண்ட தீவிரவாத நிலைப்பாட்டில் தென்னிலங்கையில் 1971, 1988 களில் இளைஞர் கிளர்ச்சிகள் நடைபெற்றன. அவற்றின் அழிவுபூர்வமான விளைவுகளை எல்லோருமே அறிவார்கள். வடக்கு கிழக்கிலே முடிவற்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் மிதமிஞ்சிய அழிவுகளுக்கு தமிழ் மக்கள் தரப்பில் இளைஞர்களின் பங்களிப்பு மட்டும் என்ற நிலைப்பாடும் ஒரு முக்கிய காரணமாகும்.*

*எனவே மலையக இளைஞர் யுவதிகள் பிற்போக்கான மலையக அரசியல் சூழ்நிலைக்கு உதவுகின்ற வலதுசாரி சந்தர்ப்பவாத போக்கிற்கு இழுபடாமலும், எல்லாவற்றையும் நிராகரித்து இளைஞர்களின் பங்களிப்பை மட்டும் வலியுத்துகின்ற தீவிரவாத போக்கிற்கு இழுபடாமலும் நிதானமான, எல்லா வித ஏற்றத் தாழ்வுகளையும் தகர்க்கவல்ல தொழிலாளர் வர்க்க நிலைப்பாட்டில் உறுதியாக நிலையெடுத்தல் வேண்டும். அதுவே மலையக மக்களுக்கு எதிரான சகல அடக்கு முறைகளுக்கும், ஒடுக்கல்களுக்கும் எதிராக எழ வேண்டிய சரியான தெரிவாக இருக்க முடியும்.*

**-ஆசிரியர் குழு-**

# ஆளும் தலைவர்கள் யார்? ஆளப்படும் மக்கள் எவர்?

அடுத்த காலப் பகுதிக்கான அரசாங்கத்தையும் அதற்குரிய தலைவர்களையும் தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் பொதுத் தேர்தல் என்பன இடம் பெறப் போகின்றன. ஜனநாயகம், சுதந்திரம் என்பனவற்றின் பெயரால் மீண்டும் மக்கள் வாக்கிளக்குமாறு நிர்ப்பந்திக்கப்படப் போகிறார்கள். நாட்டின் பெரும்பான்மையான மக்கள் மாற்று வழி இன்றி இத் தேர்தல்களின் மூலம் தமக்கு விமோசனம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் வாக்களிக்கவே செய்வார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியோ இரண்டில் ஒரு கட்சியினர் ஆட்சி பீடத்திற்கு வந்து கொள்வார்கள். ஏனைய கட்சிகள் இவற்றுக்கு உறுதுணை வழங்கிக் கொள்வார்கள்.

ஆனால் வாக்களித்த ஏகப் பெரும்பான்மையான மக்கள் தமக்கு முன்னால் நகர்த்த முடியாதவாறு இறுகிப் போய் கிடக்கும் பெரம் பாறைகள் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளால், அல்லலுறுவது தொடரவே செய்யும். தேர்தல் காலத்தில் மேற்படி கட்சிகளால் வழங்கப்படும் வாக்குறுதிகள் எதுவும் மக்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்கப்படுவதில்லை. தேர்தல் காலத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகளுக்கும் ஆட்சிக்கு வந்த பின்நடைமுறைப்படுத்தப்படும் நடைமுறைத் திட்டங்களுக்கும் பெருமளவு சம்மந்தம் இருப்பதில்லை.

சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்படும் அரை நூற்றாண்டு கடந்த நிலையிலும் அடுத்த நூற்றாண்டினுள் புகப்போகும் சூழலிலும் மக்களை ஏமாற்றி உண்மைகளை மறைத்து ஆட்சிகளைத் தொடர்வதற்கே பிரதான அரசியல் கட்சிகளும் அவற்றுக்கு துணை நிற்கும் கட்சிகளும் முயலுகின்றன. அதே வேளை அரசு, அரசாங்கம், அரசியல் கட்சிகள் பற்றிய தெளிவான விளக்கங்களும் நமது சமூக அமைப்பின் வர்க்கத் தன்மைகள் பற்றிய புரிதல்களும் மக்களிடையே பரப்பப்படல் வேண்டும். அதன் அடிப்படையில் அரசியல் விழிப்புணர்வும் செயற்பாடுகளும் அமைதல் வேண்டும் என்பதையே இன்றைய நிலைமைகள் வற்புறுத்துகின்றன.

ஒரு அரசாங்கத்தை முழு மக்களும் தமது சுய விருப்பின் படி தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதும் அத்தகைய அரசாங்கம் சகல மக்களுக்கும் ஜனநாயகம் சுதந்திரம் என்பவற்றின் வாயிலாக சேவை செய்கிறது என்பதும் அப்பட்டமான பொய்களாகும். மக்களால் மக்களுக்காக, மக்கள் மீது நடாத்தப்படும் ஆட்சி தான் ஜனநாயக ஆட்சி என்பது உண்மையான அரசையும், அரசாங்கத்தையும் மக்கள் கண்டு கொள்ளாது இருப்பதற்காக இட்டுக் கட்டப்பட்ட ஒரு முதலாளித்துவ மூடு திரையேயாகும்.

உலகின் மக்கள் சமூகங்கள் யாவும் பல்வேறு இன மொழி மத நிற வேறுபாடுகளுடன் காணப்பட்டாலும் அடிப்படையானதும் இணக்கம் காணப்படாத வேறுபாடாகவும் அமைந்திருப்பது வர்க்கங்களே யாகும். இந்த வர்க்க வேறுபாடு அதி உயர் தனிச்சொத்தின் அடிப்படையிலேயே வரையறை பெற்று நிற்கின்றன. பல்லாயிரம் வருடங்களாக நிலைநிறுத்தப்பட்டு வந்த வர்க்க சமூகத்தில் அரசும்

**ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை அடக்கி ஆள்வதற்கு உரிய கருவியே அரசு**

அரசாங்கங்களும் ஆட்சி முறைமைகளும் நிலை பெற்று வந்துள்ளன.

அரசு, அரசாங்கம், ஆட்சிமுறைமைகள் பற்றிய விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை மார்க்சிச மே வழங்கியது. அரசு பற்றி விளக்குகையில் "ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை அடக்கி ஆள்வதற்கான கருவியே அரசு" எனக் கூறியது. தனிச் சொத்துடமையையும் அதற்குரிய அதி உயர் வர்க்கங்களையும் பாதுகாத்து நிலை நிறுத்தும் வகையிலேயே மனித வரலாற்றில் அரசு தோற்றுவிக்கப்பட்டது. இவ் அரசின் முக்கிய பகுதியாக விளங்குவது அரசு யந்திரமாகும். இது ஆயுதப் படைகள், நீதிமன்றம் சிறைச்சாலை அவற்றோடு தொடர்புடைய நிறுவனங்களால் ஆனதாகும்.

இவ்வாறே அரசாங்கம் என்பது நடைமுறையில் உறுதியாக்கப்பட்ட அரசையும் அதன் நிறுவனங்களையும் பாதுகாத்து நிர்வகித்து வழி நடாத்திச் செல்லும் பணியினை மேற்கொள்கிறது. பிரதானமாக அரசை உழைக்கும் மக்களது எதிர்ப்பில் எழுச்சியில் இருந்து அன்றாடம் பாதுகாப்பதையும் அரசாங்கம் முக்கிய பணியாக நிர்வகிக்கிறது. இவ் அரசாங்கத்தை அரசியல் கட்சிகளில் இருந்து தேர்ந்தேடுக்கப்படும் பிரதிநிதிகள் பொறுப்பேற்று செயல்படுத்து கிறார்கள்.

அரசியல் கட்சிகள் என்பன எல்லா மக்களுக்குமான கட்சிகளாக இருப்பதில்லை. அவையாவும் ஒவ்வொரு வர்க்கங்களின் தேவை அபிலாஷைகளையே பிரதிபலிக் கின்றன. அவை வெளித் தோற்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகள் போன்று காட்சி கொடுப்பினும் அரசாங்கத்தை தலைமை தாங்கி நடாத்தும் போது எற்கனவே சொத்துடைய வர்க்கத்தின் சார்பாக நிலை நிறுத்தப்பட்ட அரசையும் அரசு யந்திரத்தையும் பாதுகாத்து சேவை செய்வதையே அடிப்படை யானதாகக் கொண்டுள்ளன. அத்தகைய அரசாங்கங்களினால் எவ்வாறு சொத்துடமையற்ற உழைக்கும் வர்க்கங்களுக்கு நன்மைகள் வழங்கமுடியும். உழைக்கும் வர்க்கங்கள் கேள்வி எழுப்பி எதிர்ப்புக் காட்டாத வரை அரசு யந்திரமும் அரசாங்கமும் அமைதியாகத் தமது சுரண்டலையும் உயர் வர்க்கத் தேவையையும் முன்னெடுத்துச் செல்வார்கள். ஆனால் உழைக்கும் வர்க்கம் கேள்விகளுடன் எதிர்த்து எழுச்சி பெற்றால் கொடிய அடக்குமுறைகளை அந்த வர்க்கத்தின் மீது வெவ்வேறு வடிவங்களில் நடைமுறைப்படுத்திக் கொள்வார்கள்.

இலங்கையைப் பொறுத்த இதுவரையான சகல அரசாங்கங்களும் அவற்றை வழி நடாத்திய அரசியல் கட்சிகளும் அரசு யந்திரத்தை, உயர் வர்க்கத்தைப் பாதுகாத்து அந்நிய முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளை அரவனைத்து வந்த நடைமுறையையே கைக் கொண்டு வந்துள்ளன. அதே வேளை காலத்திற்குக் காலம் உழைக்கும் வர்க்கங்களை அடக்கி ஒடுக்கி அவர்களது எழுச்சிகளை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தும் வந்துள்ளமை இன்றுவரை தொடர்வதாகும். இன்று தொடரப்படும் தேசிய இனப்பிரச்சினை காரணமான யுத்தம் கூட சாராம்சத்தில் சொத்துடைய உயர் வர்க்கத்தையும் அவர்களது அரசு நிறுவனத்தையும் பாதுகாப்பதற்கான யுத்தமேயாகும். இன ஒடுக்குதல் மூலம் வர்க்க சுரண்டலும் வர்க்க ஒடுக்குமுறையும் வேகப்படுத்தப் பட்டுள்ளன. எனவே பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் கூட்டணி உள்ளிட்ட தமிழர் கட்சிகள், முஸ்லீம் காங்கிரஸ் என்பன யாவும், எல்லா மக்களுக்குரிய கட்சிகளோ அல்லது அவ் அவ் இனமொழி, மத நலன்க்ளுக்காக அரசாங்கத்தில் பங்கு கொள்வனவோ அல்ல. அவை யாவும், சாராம்சத்தில், சொத்துடைய உயர் வர்க்க நலன்களுக்கானவை என்பதே உண்மையாகும். இந்த உண்மைகள் மக்களால் உணரப்படும் போதே அடிப்படை மாற்றத்திற்கான பாதையும் திறக்கப்படும்.

**மக்களால் மக்களுக்காக மக்கள் மீது நடாத்தப்படும் ஆட்சியே ஜனநாயக ஆட்சி என்பது சுத்த ஏமாற்றாகும்**

நன்றி - நூலகத்திட்டம்



# பாராளுமன்ற தேர்தலைக் குறிவைக்கும் மலையகத் தலைமைகள்

மாகாணசபைத் தேர்தல் பெறுபேறுகளை வைத்துக்கொண்டு அவரவர் தனக்கேற்றவாறான பகுப்பாய்வுகளுடன் பாராளுமன்ற தேர்தலுக்கு தயாராகிவருகின்றனர். மாகாணசபை தேர்தலில் வெற்றிபெற்ற இ.தொ.கா., மமமு, இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் மாகாணசபை உறுப்பினர்கள் பாராளுமன்ற தேர்தலை குறிவைத்து மக்களிடம் சென்று பல சீர்திருத்த வேலைகளுக்கான முயற்சிகளை செய்துவருகின்றனர். பல வாக்குறுதிகளையும் கொடுத்து வருகின்றனர். அதே போன்று ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மீண்டும் உறுப்பினர்களாவது பற்றி கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்..

மாகாணசபை தேர்தல் முடிவுகள் பல்வேறுவிதமான முறைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுவிட்டன. இன்னும் பல முறைகளில் செய்யப்படலாம். மாகாணசபை தேர்தல்களின் போது மலையக அரசியல் தலைமைகளின் மீது மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தனர் என்பது உண்மை. அவ்வெறுப்பு வேறு வகையில் திட்டமிட்டு வெளிக்காட்டப்பட்டது என்பதும் திசை திருப்பப்பட்டது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அதாவது இ.தொ.கா. வின் கையாட்களாக இயங்கிய சில தொழிலாளர்கள் இ.தொ.கா. வை தவிர வேறு யார் பிரசாரம் செய்ய வந்தபோதும் இ.தொ.கா. உட்பட சகல தொழிற் சங்கங்களையும் அரசியல் கட்சிகளையும் விமர்சித்து தள்ளினர். அந்த அதிருப்தியையே மக்களின் கருத்தாக காட்டினர். அதன் மூலம் மக்களின் உண்மையான நிலைமையை அறியமுடியாது ஏனைய அரசியல் கட்சிகள் தடுக்கப்பட்டன. அத்துடன் அக்கட்சிகளின் கருத்துக்கள் மக்களிடம் சென்றடையாதவாறு தடுக்கப்பட்டன. வீழ்ச்சியடைந்திருந்த இ.தொ.கா. அதன் கையாட்களின் மூலம் இந்த யுக்தியை கையாண்டுள்ளது. உண்மையிலேயே விரக்தியடைந்த மக்களை திட்டமிட்டு மேலும் விரக்தி நிலைக்கு தள்ளி அவர்களை எதிலுமே நம்பிக்கையற்றவர் களாக்கினர். இறுதியில் இ.தொ.கா. வே தஞ்சம் என்று யோசிக்கும் நிலைமைக்கு தள்ளினர். அதைவிட பணத்தை வாரி இறைத்து பல விஷயத்தையும் பண்ணினார்கள்.

இது ஒரு புறமிருக்க அதிகமான தோட்டங்களில் இ.தொ.கா. ஏற்பாட்டில் 'இந்து இளைஞர் மன்றம்' என்ற பேரில் மன்றங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. அம்மன்றங்களில் பொதுவாக வேலையற்ற இளைஞர் களை வைத்து பொதுவாக இளைஞர்களிடையே இருக்கும் சரியான எழுச்சிகளை வேறு திசைகளில் திருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இம்மன்றங்களிலுள்ள அதிகமான இளைஞர்கள் பல இடங்களில் இ.தொ.கா வின் கையாட்களாகவே நடந்து கொண்டனர்.

இதைவிட பொதுவாகவே பொய் வாக்குறுதிகளை அதிகமாகவே கொடுத்து 'பல நாடகங்களையும்' நடத்தி மலையக மக்களை ஏமாற்றுவதில் பாரம்பரிய தொழிற்சங்க வழியை பின்பற்றும் எல்லா அமைப்புகளும் கடைப்பிடித்தன. இவ்வாறான பிரசாரங்களினால் பாரிய வெற்றியை பெறாவிட்டாலும் இ.தொ.கா.வும் மலையக மக்கள் முன்னணியும் தம்மை தக்க வைத்துக்கொண்டன. நேர்மையான சக்திகளின் மீது மக்களை நம்பிக்கை கொள்ளாவிடத்து தடுத்தன.

மேற்படி பின்னணியிலிருந்து கொண்டே மலையக அமைப்புக்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை எதிர்கொள்ள இருக்கின்றன. சிறிபாத கல்வியியல் கல்லூரி மாணவர்களின் போராட்டத்தை அதே நோக்கிலேயே அணுகின. அப்போராட்டத்தில் மாணவர்களின் பக்கம் நிற்பதாக போட்டி போட்டுக் கொண்டு ஏறக்குறைய எல்லா அமைப்புகளும் நின்றன.

மாணவர்களை தூண்டி மாணவர்களின் பக்கம் நிற்பதாக காட்ட வேண்டிய தேவை இ.தொ.கா. விற்கு நிறையவே இருந்தது. அதனூடாகக படித்தவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற முயற்சித்தது. அதேவேளை மத்திய மாகாணசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டாலும் எதிர்பார்த்தபடி அமைச்சர் பதவி கிடைக்காதபடியால் இ.தொ.கா.வின் தலைமையை இக்கட்டான நிலைமையில் போடுமளவிற்கு மாணவர்களின் சார்பாக ஏ.கந்தசாமி இயங்கியதாக இ.தொ.கா. வட்டாரங்களே குற்றம் சாட்டியுள்ளன. மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்து கல்லூரியை மீண்டும் திறப்பதற்கும் நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் கல்லூரிக்கு எடுக்கச் செய்யவும் தாம் பொறுப்பான பிரதியமைச்சர் சந்திரசேகரம் வாக்குறுதியளித்தார்.

ஆனால் இ.தொ.கா. வின் ஆறுமுகம் தொண்டமான் கல்லூரியை திறப்பதற்கும், நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் எடுப்பதற்கும் காரணமாக இருந்ததாக காட்டிக்கொண்டார்.

சிங்கள வீரவிதான இயக்கம், பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி ஆகிய பேரினவாத அமைப்புகள் மலையக மக்களுக்கு எதிராக தீவிரமாக செயற்படுகின்றன என்றும் அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கப் போவதாகும் இ.தொ.கா. தலைவர்கள் தெரிவித்தனர். அதுபற்றி மே தின வேளையில் இ.தொ.கா. தலைவர் தொண்டமானும் மலையகத்தை சேர்ந்த இ.தொ.கா. எம்.பீக்களும் பெரிதாகப் பேசினர்.

சிங்கள வீரவிதான இயக்கம் இ.தொ.கா.வின் தலைமை காரியாலய வளவுக்குள் சென்று இ.தொ.கா. கொடியை கழற்றி எரித்ததனால் அதற்கு எதிராக இயக்கம் நடத்த வேண்டும் என்று கொழும்பிலுள்ள இ.தொ.கா பிரமுகர்கள் இயக்கம் நடத்த வேண்டும் என்று எல்லோரையும் கூறி அமைத்தாலும் நடைமுறையில் எதையும் செய்யவில்லை.

சிறிபாத கல்வியியல் கல்லூரி பிரச்சினை மற்றும் இனவாதத்திற்கு எதிரான இயக்கம் போன்றவற்றை மிகவும் மேலோட்டமாக தேர்தல் கண்ணோட்டத்துடன் அணுகுவது சிறுபிள்ளைத்தனமானதும் மலையக மக்களின் இருப்புக்கு மிகவும் பாதிப்பானதாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளால் மலையக மக்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதற்காக மக்கள் மீது அக்கறை கொண்டுள்ள நேர்மையான சக்திகள் மக்கள் மத்தியில் சரியான கருத்துக்களை கொண்டுச் செல்ல பாடுபட வேண்டும். பாரம்பரிய தலைமைகளுக்கு மாறாக சரியான தலைமைத்துவத்தை கட்டி வளர்க்கும் முயற்சியில் வலதுசாரி சந்தர்ப்பவாதத் திற்கோ தீவிரவாதத்திற்கோ இடமளிக் காது சரியான வழியில் முன்னேற வேண்டியது அவசியமாகும். ■

# சிறிபாத கல்லூரியின் போராட்டம் வாக்குறுதி அரசியலால் வென்றதா?

பத்தனை சிறிபாத கல்வியியல் கல்லூரியில் என்ன நடந்தது என்பதை விளங்கிக் கொள்ள முடியாமல் இருப்பதாக சிலர் குழம்பிப் போயிருக்கிறார்கள். நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கு மிடையில் பிரச்சினைகள் இருந்து வந்தன. அதன் காரணமாக அங்கு வேலை செய்யும் லிகிதர் ஒருவருக்கும் தமிழ் மாணவர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பை அடுத்து எட்டு மாணவர்கள் கல்லூரியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டனர். அதனை எதிர்த்து பலமட்டங்களிலிருந்தும் எதிர்ப்பு இயக்கங்கள் முன்னெடுக்கப் பட்டன. கல்லூரி மாணவர்கள் சத்தியாகிரகப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனை முறியடிக்கும் விதத்தில் கல்லூரி யூன் 15ஆம் திகதிவரை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. பிரதியமைச்சர் பி. சந்திரசேகரத்தின் வாக்குறுதியை அடுத்து அதாவது குறிப்பிடப்பட்ட யூன் 15ஆம் திகதி கல்லூரி திறக்கப்படும் என்றும் நீக்கப்பட்ட 8 மாணவர்களும் திரும்பவும் எடுத்துக் கொள்ளப்படுவர் என்றும் அவர் கொடுத்த வாக்குறுதியை அடுத்து மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை கைவிட்டனர்.

அதற்கு பிறகு கல்லூரி கால வரையற்று மூடப்படும் என்று கல்வியியல் கல்லூரிக்கு பொறுப்பாக கொழும்பிலுள்ள கல்வி அமைச்சிலுள்ள நிர்வாகம் முடிவு செய்தது. 8 மாணவர்களையும் கல்லூரிக்கு திருப்பி எடுக்க முடியாது என்றும் அறிவிக்கப்பட்டது.

மாணவர்கள் கல்லூரி வளவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மாணவர்கள் வெளியேற்றப்படும் வரை அவர்களின் போராட்டத்தை ஆதரித்து பல தொழிற்சங்கத் தலைவர்களும் கல்லூரிக்கு சென்று மாணவர்களை சந்தித்து வந்தனர். சிலர் அவர்களுக்கு சாப்பாடும் வாங்கிக் கொடுத்தனர்.

பின்பு மாணவர்கள் கல்லூரி கேட் வாயிலில் கூடி சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதற்கு பொதுமக்களினதும், பாடசாலை மாணவர்களின் ஆதரவும் கிடைத்தன பின்பு திடீரென கல்லூரி திறக்கப்பட்டது. அதன் பிறகு ஒரு வார காலத்துக்குப் பிறகு விலக்கப்பட்ட எட்டு மாணவர்களும் கல்லூரிக்குள் கொண்டு வந்து விடப்பட்டனர்.

நீக்கப்பட்ட எட்டு மாணவர்களை திருப்பி எடுக்கவே கூடாது என்று பிடிவாதமாக ஒருமுகமாக இருந்த கல்லூரியின் கல்விசாரா ஊழியர்களின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. அதாவது மாணவர்கள் குறிப்பிட்ட லிகிதரை தாக்கியப் பிறகு அனைத்து கல்விசாரா ஊழியர்களும் மாணவர்களுக்கு எதிராகவே இருந்தனர். ஆனால் இக்கட்டத்தில் அவர்களில் பெரும்பான்மை யானவர்கள் மாணவர்களை பழிவாங்கக் கூடாது என்று நிலைப்பாட்டிற்கு வந்தனர். அதனால் அந்த எட்டு மாணவர்களும் மீண்டும் கல்லூரிக்குள் வருவது இலகுவானது.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் கல்லூரியை மீண்டும் திறக்க வைப்பதாகவும், எட்டு மாணவர்களையும் மீண்டும் கல்லூரிக்கு எடுக்க வைப்பதாகவும் வாக்குறுதி கொடுத்தவர் சந்திரசேகரன், ஆனால் கல்லூரியை திறக்க வைத்ததும், மாணவர்களை மீண்டும் எடுக்க வைத்ததும் ஆறுமுகம் தொண்டமானாவார் என்று பேசப்படுவதுதான். அந்த எட்டு மாணவர்களும் கூட ஆறுமுகம் தொண்டமானுக்கு "கிரடிட்" கொடுப்பவர்களாகவும் இருப்பது மட்டுமன்றி ஒரு வார காலத்துக்கு மேலாக ஆறுமுகம் தொண்டமானின் கொட்டகலை இருப்பிடத்தில் இருந்ததாகவும் பேசப்படுகிறது.

சிறிபாத கல்வியியல் கல்லூரியின் நிர்வாக சீர்கேடுகளுடன், வசதியீனங்களுடனும் தொடர்புடையதாக, இனவாதரீதியானதாக கொள்ளப் பட்ட மேற்படி போராட்டம் கல்லூரியை திறப்பதற்கும், மாணவர்களை மீண்டும் எடுத்துக்கொள்வதற்கு மான போராட்டமாக வரையறுக்கப் பட்டது. கல்லூரி திறந்திருப்பதும் மாணவர்கள் எல்லோரும் படிப்பதும் மிகவும் அடிப்படையான விடயங்கள் என்பதை மறுப்பதற்கில்லை. சிறிபாத கல்வியியல் கல்லூரி மாணவர்களது நீண்ட கோரிக்கையினதும் போராட்டத்தி னதும் விளைவாகவே கல்லூரி மூடப்பட்டது. எட்டு மாணவர்கள் நீக்கப்பட்டனர்.

எனவே சிறிபாத கல்வியியல் கல்லூரி மாணவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப் படாதபடியால், போராட்டம் முடிந்து விட்டதாக கூறமுடியாது.

தங்களை மீண்டும் கல்லூரிக்கு கொண்டு சென்று விட்ட அரசியல்வாதியை விட வேறுயாரையும் பற்றி அந்த 8 மாணவர்களும் மதிப்பிடத் தவறுகின்றனர். ஒரு போராட்டத்தில் பல்வேறு படிமுறைகள் இருக்கும். அவை ஒவ்வொன்றிலும் மாணவர்களுக்கு சாதகமாகவும், பாதகமாகவும் இருந்தவர்களையும், சக்தி களையும் பிரித்தறிய வேண்டும். ஒரு போராட்டத்துக்கு எல்லாவிதமான சக்திகளும் ஒரேவிதமாக உதவ முடியா. ஒவ்வொரு சக்தியும் ஒவ்வொரு விதமாக பங்களிப்பு செய்யமுடியும். அந்தவகையில் ஒவ்வொரு சக்தியும் ஒவ்வொரு விதமாக சிறிபாத போராட்டத்தில் பங்கெடுத்துள்ளனர். அப்பங்களிப்புகள் அவற்றின் அரசியல் நோக்கிற்கு உட்பட்டதாகவே இருக்கும் என்பதால் அவை பற்றி சினேகபூர்வமாக விமர்சிக்கலாம். ஆனால் சிறிபாத கல்லூரி திறக்கப்படவும், நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் எடுத்துக்கொள்ளவும் முயற்சிசெய்த நேரடித் தொடர்பற்ற சக்திகளை புறக்கணிக்க முடியாது.

போராட்டங்கள் எவ்வாறு நேர்மையாக நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்களை அடிபணிய அல்லது நிப்பந்திக்க வைக்கின்றன என்பதிலேயே அதன் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக் கின்றன. சிறிபாத கல்லூரி மீண்டும் திறக்கப்படவும், விலக்கப்பட்ட மாணவர்கள் மீண்டும் எடுக்கப் பட்டதற்கும் பலவிதமான அழுத்தங்கள் இருந்தன. அதில் கடைசி நிமிடம் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு மட்டும் அக்கிரடிட்டை கொடுப்பது மலையகத்தின் தலைமைகளின் வழமையான 'வாக்குறுதிகளை ஏற்பதும் அவ்வாக்குறுதி அரசியலுக்கு பின்னால் இழுபடுவதுமாகும்.

எனவே நடைபெற்ற போராட்டத்தில் ஒவ்வொரு சக்திகளின் பங்களிப்பையும் அவற்றின் சரி பிழைகளையும், போராட்டத்தினை நடத்தும்போது ஏற்பட்ட சரி பிழைகளை சரியாக மதிப்பிட வேண்டும். மதிப்பிடாவிட்டால் எதிர்காலத்தில் ஐக்கியப்பட்ட போராட்டமொன்றை மலையகத்தில் முன்னெடுப்பது சாத்தியமில்லாது போய்விடும். ●

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழரசுக் கட்சி தனிமைப்பட்டது.

## தந்தையும் மைந்தரும் (15)

தமிழரசுக் கட்சியின் அரசியல் அஸ்தமனத்தினின்று சிங்களப் பேரினவாதிகள் அதைக் காத்தாலும் தமிழரசுக் கட்சியின் அரசியல் தற்கொலையைத் தடுக்கும் ஆற்றல் சிங்களப் பேரினவாதிகட்கு இருக்கவில்லை. மக்களிடமிருந்து தமிழரசுக்கட்சி எவ்வளவு தூரம் தனிமைப்பட்டிருந்தது என்பதற்கு 1970–77 காலத்தில் அதன் சில நடவடிக்கைகளைக் கவனித்தால் விளங்கும்.

மீண்டும் தன்னைப் பாராளுமன்றத்திற்குள் நுழையச் செய்ய வேண்டி அமிர்தலிங்கம் தன்னைச் சூழ ஒரு இளைஞர் அணியைக் கட்டி வளர்த்தார். அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக அவர் கிளறிவிட்ட உணர்வுகளும் காட்டிய தோற்றங்களும் அவரைப் பொறுத்தவரை ஒரு அரசியல் விளையாட்டு என்பதை 1977க்குப் பின்புதான் மக்கள் முற்றாக அறிந்தனர். அவரது தீவிரமான நிலைப்பாட்டை நம்பிய இளைஞர்கள் அவர் அடைய விரும்பியது பாராளுமன்ற ஆசனமே ஒழியத் தமிழ் ஈழமல்ல என்பதை அறியவும் சில காலம் எடுத்தது.

இந்தப் பின்னணியில் தமிழரசுக் கட்சியின் தலைமையின் யோக்கியத்தைக் கேள்விக்குள்ளாக்குகிற மாதிரி சில விடயங்கள் நடந்தன. யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்ட போது அதைத் தமிழரசுக் கட்சி எதிர் கொண்ட விதம் வினோதமாக இருந்தது. திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்க எடுத்த முயற்சிக்கு ஆதரவு கொடுத்த தமிழரசுக் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகம் என்று சவால் விட்டவர்களைத் தமிழ்க் காங்கிரஸ் ஆதரித்து, இரண்டுமே இல்லாமல் போனது பழைய கதை, யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக வளாகம் வந்தவுடனே அதை எதிர்க்கத் தம்மாலான எல்லா முயற்சிகளையும் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்டனர். பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்திற்கு எடுத்ததையும் தற்காலிகமாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக் கட்டிடங்களில் விஞ்ஞான பீடத்தை நிறுவியதையும் கடுமையாக எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் இன்னொரு வாதத்தையும் பாவித்தனர். யாழ் வளாகத்திற்குச் சிங்கள மாணவர் வருவது தடுக்கப்பட வேண்டும் எனவும் தவறினால் சிங்கள ஊடுருவல் நடக்கும் எனவும் வாதித்தனர். அவர்களது ஆட்சேபனைகள் யாழ்ப்பாண மக்கள் நடுவே எடுபடவில்லை.

பேராசிரியர் கைலாசபதி வளாகத் தலைவராகவும் பேராசிரியர் கா. இந்திரபாலா கலைப்பீடாதிபதியாகி யாழ் வளாகத்தைக் கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகள் மக்களிடையே பெரும் ஆதரவைப் பெற்றன. மற்ற எந்த வளாகத்தையும் விடத் தன்னைச் சூழவுள்ள சமூகத்துடன் நல்ல நேரடி உறவு கொண்ட ஒரு வளாகமாக யாழ் வளாகம் வேகமாக விருத்தி பெற்றதை தமிழரசுத் தலைமையால் தாங்க முடியவில்லை.

பிற மாவட்டமாணவர்களுக்கு இருப்பிட வசதி கொடுக்க வேண்டாமென்று யாழ் நகர மக்களிடம் தமிழரசுக் கட்சியினர் செய்த பிரசாரம் அதற்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தியது. அரசாங்கம் மனம் விரும்பி வட பகுதியில் செய்த மிக உருப்படியான காரியம் யாழ் வளாகத்தை நிறுவியதும் அதன் பொறுப்பை ஆளுங் கட்சி ஆதரவாளரல்லாத கைலாசபதியிடம் கொடுத்ததும் ஆகும் என்னும்படியாக யாழ் வளாகம் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. யாழ் வளாகத்தைப் பற்றி ஒருவரது நிலைப்பாடு அவரது சமூகப் பார்வையின் அளவுகோல் எனும்படியான நிலவரம் வந்த பின்பே தமிழரசுக் கட்சியினர் கறுவிக் கொண்டு பின் வாங்கினர். யூ.என்.பி ஆட்சிக்கு வந்த பின்பு யாழ் வளாகம் பல்கலைக் கழகம் ஆனது. அப்போது கைலாசபதியின் இடத்தில் யூ.என்.பிக்கும் தமக்கும் ஏற்ற ஆளான பேராசிரியர் வித்தியானந் தனைத் துணை வேந்தராக்கியதே தமிழரசுக் கட்சியின் அரசியல் சாதனையாகியது. அதன் பின் நடந்தவை பற்றி இங்கு விவரிக்க இடமில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் புதிய துன்பங்களின் தொடக்கப்புள்ளியான 1977க்குப் பின்பு நடந்தவை இன்னொரு அரசியல் சகாப்தத்துக்குரியன.

1972ல் தேயிலைத் தோட்டங்கள் தேசிய மயமானதையடுத்து சகல பெருந் தோட்டங்களும் அரச கூட்டுத்தாபனங்களின் கீழ் வந்தன. சிங்கள பேரினவாதிகள் பலர் தோட்டங்களில் பொறுப்பேற்றனர். 1973–1975 காலத்தில் ஏற்பட்ட வரட்சி தோட்டங்களில் வேலையின்மைக்குக் காரணமாகியது. இச் சூழ்நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் பலர் தோட்டங்களிலிருந்து நிர்வாகத் தினரால் விரட்டப்பட்டனர். சிலர் வறுமை காரணமாகத் தாமாகவே வெளியேறினர். மலையகத் தமிழர்களிற் பலரை இந்தியாவுக்குப் போகுமாறு தூண்டிய முக்கிய காரணங்களில் இக்காலகட்டத்தின் கொடுமைகளும் அடங்கும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு ஈடு கொடுக்க மலையகத் தமிழரை வடக்கு–கிழக்கு மாகாணங்களில் குடியேற்றும் யோசனை 1960களின் பிற்பகுதியிலேயே சில தமிழ்த் தேசியவாதிகளது மனதில் முளைவிட்டிருந்தது. இதைக் குறிப்பிடத்தக்க அளவில் நடைமுறைப்படுத்த இயலாத விதமாக அரசாங்கக் கெடுபிடிகள் இருந்த அதேவேளை மலையக மக்களைக் கவரும் விதமான நிலவரங்களும் வன்னியிலோ



கிழக்கிலோ இருக்கவில்லை. அதை விட முக்கியமாக, இத்தகைய ஒரு குடிப்பெயர்வை நடைமுறைப் படுத்துவதற்கு அவசியமான வேலைத்திட்டமோ அரசியற் திட்டமோ கொள்கை அடிப்படையோ கூடத் தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை. வன்னிக்குக் குடிபெயர்ந்த மலையகத் தொழிலாளர்கட்டு சொந்தத்தில் பயிரிடக் காணியும் பிற வசதிகளும் ஏற்படுத்துவதற்கு ஒரு விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மறுபுறம் வாழ வழி தேடி வந்தவர்களை வன்னியில் பெரும் காணிப் பரப்புக்களைத் தமதாக்கிக் கொண்டவர்கள் மலிவான உழைப்பாளர்களாகப் பயன்படுத்தினர். சாதிய அடக்குமுறைக்கும் நிலவுடைமை மனோபாவத்துக்கும் பழக்கப்பட்ட இந்தச் சுரண்டற் காரர்களிடமிருந்து தப்பி மீண்டும் மலையகத்துக்கே மீண்டவர்கள் பலர். இந்த நிலைமையில் காந்தியம் போன்ற சில அமைப்புக்கள் மட்டுமே மனிதாபிமானமான முறையில் மலையகத் தமிழர்க்கு அங்கு வாழ வழி செய்தன. அரசாங்கத்தின் நெருக்குவாரங்களிடையிற் செயற்பட்ட இவர்கட்குத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு கிடைத்ததாகக் கூற இடமில்லை. எனினும் தீவிரவாத இளைஞர்கள் சிலர் இத்தகைய அமைப்புக்களுடன் தமது தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். ஆயினும் பின்னர் யூ.என்.பி அரசாங்கம் குற்றஞ்சாட்டியது போல இந்த அமைப்புக்கள் தமிழ்த் தீவிரவாதிகளது பாசறைகளாக இருக்கவில்லை.

தமிழரசுக் கட்சியின் சந்தர்ப்பவாத அரசியலின் இன்னொரு முக்கியமான சாட்சியம் தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதத்தால் மறைக்கப்பட்டு வருகிறது. 1974ல் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு அரசாங்கங்களதோ அரசியற்கட்சிகளதோ தலையீடின்றி நடத்திருக்க வேண்டிய ஒன்று. இந்த மாநாடு தனிநாயக அடிகளினதும் பிற தமிழறிஞர்களதும் முயற்சியால் கோலாலம்பூரில் முதலில் நடத்தப்பட்டது. அடுத்து பாரிஸிலும் சென்னையிலும் நடந்தது. சென்னை மாநாட்டை தி.மு.க. அரசாங்கம் தனது பிரசாரத்துக்கு வசதியாகப் பயன்படுத்தியது. தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்பது கட்சி அரசியல் சாராது நடத்தப்பட வேண்டும் என்றே தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் பல முக்கிய பிரமுகர்கள் விரும்பினர். இதற்குக் காரணம் ஒரு சர்வதேச மாநாட்டை நன்கு நடத்தும் வசதி கொழும்பிலேயே இருந்தது என்பதாகும். எனினும் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவான சிலரது நெருக்குவாரங் காரணமாக யாழ்ப்பாணத்தில் வைப்பதாக முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாநாட்டின் மூலம் தமிழரசுக் கட்சி தனக்கு விளம்பரம் தேட முயல்கிறது என்பதைக் கருதியவர்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். இச் சூழ்நிலையில், வடக்கில் இருந்த அரசியல் நிலவரத்தையும் கருத்திற் கொண்டு கொழும்பிலேயே மாநாட்டை நடத்த அனுமதிக்க முடியும் என்ற முடிவை அரசாங்கம் எடுத்தது. இந்த முடிவு அரசியற் காரணங்கள் சார்ந்தது என்பதில் ஐயமில்லை. இது இறுதிக்கட்டம் வரை மாநாடு நடத்தப்படுமா இல்லையா என்றே நிச்சயமில்லாத அளவுக்கு ஒரு இழுபறிப் போராக நீண்டது. இறுதியில் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் மாநாட்டை நடத்த அனுமதித்தது. ஆயினும் தமிழரசுக் கட்சி பற்றியும் தமிழ்த் தீவிரவாதம் பற்றியுமான ஐயங்கள் காரணமாக அரசாங்கம் மாநாட்டுக்கு வருவதற்கு விசா வழங்குவது பற்றிக் கடுமையாகவே நடந்து கொண்டது. இது தமிழரசுக்கட்சிக்கு மேலும் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது.

தமிழாராச்சி மாநாடு ஒரு தமிழ்த் தேசியவாத அரசியல் மாநாடாகிவிடும் என்ற அச்சத்தை வளர்ப்பதில் சில தமிழ் அரசியற் பிரமுகர்களது பங்கும் முக்கியமானது. அதே வேளை தமிழரசுக்கட்சியின் அரசியல் சிறு பிள்ளைத்தனமும் யாழ்ப்பாணத்தில் ஒரு நெருக்கடியான நிலவரத்தை உருவாக்கியது.

தமிழாராய்ச்சி மாநாடு வெறும் தமிழ் அறிஞர்கள் மாநாடாக இல்லாது பொது மக்களுக்கான ஒரு கலை நிகழ்ச்சியையும் வழங்க வேண்டும் என்ற நியாயமான முடிவு தமிழரசுக் கட்சியால் தனது அரசியல் நோக்கங் கட்காகத் திசை திருப்பப்பட்டது. அம் மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது இது தெளிவானது. இலங்கைக்கு வர விசா அனுமதிக்கப்படாத ஜனார்த்தனம் என்கிற பிரமுகரை இறுதிநாள் நிகழ்ச்சியில் மேடையேற்றியதன் மூலம் தமிழரசுக் கட்சி தன்னால் அரசாங்கத்தை மீறவும் அதன் கண்களில் மிளகாய்ப்பொடி தூவவும் முடியும் என்று சவால் விட்டது.

இதற்குப் பதிலடியாக அரசாங்கத்தின் பொலிஸ்படை அவரைக் கைது செய்ய முற்பட்டனர். இறுதிநாள் நிகழ்ச்சிகள் குழப்பமான நிலைமைகளில் நடுவே கடைசி நேரத்தில் வீரசிங்கம் மண்டபத்திலிருந்து முற்றவெளி மைதானத் துக்கு மாற்றப்பட்டது. இதில் பொலிஸ் அனுமதி பெறுவதில் ஏற்பட்ட இழுபறிகள் பதற்றத்தை மேலும் அதிகமாக்கின. இத்தகைய சூழலில் ஜனார்த்தனத்தைப் பிடிக்க முயன்ற பொலிசாருக்கு சனத்திரளை மீறி மேடைய அணுக இயலவில்லை. வழமையான பொலிஸ் முரட்டுத்தனம் கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக ஏற்பட்ட நெரிசலிலேயே ஏழு உயிர்கள் வீண் பலியாயின. இச் சாவுகட்குப் பொலிசாரின் பொறுப்பற்ற நடத்தை முக்கியமான காரணம் எனினும், தமிழரசுக்கட்சிப் பிரசாரத்தில் உள்ள ஒரு பொய் மறுக்கப்பட வேண்டும். பொலிசார் சனங்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துதான் சாவுகள் நிகழ்ந்தன என்ற அபிப்பிராயம் கவனமாக இன்னமும் பேணப்படுகிறது.

மாநாட்டை அரசாங்கமும் பொலிசும் கையாண்ட விதம் பற்றிக் கண்டிக்க எவரும் தயங்க நியாயமில்லை. அதே வேளை மாநாட்டைத் தமது அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்த முற்பட்டு ஒரு வெகுசனக் கலாசார நிகழ்ச்சியாகவும், கொண்டாட்டத் துக்கு உரியதாகவும் அமைய வேண்டிய நாளைத் தனது அரசியல் தேவைகட்காகச் சீரழித்ததில் தமிழரசுக் கட்சியின் பங்கை மூடிமறைப்பது சரியாகாது. பின் விளைவுகள் பற்றிய யோசனை இன்றி மக்களை இம்சைக் குள்ளாக்குகிற விதமாக தமிழரசுக் கட்சி நடத்தது இதுதான் முதலுமில்லை, இதுதான் கடைசியுமில்லை.

# வரதராஜப் பெருமாள் வாலாட்டுவது யாருக்காக?

தமிழ்த் தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் அனைத்தும் விடுதலையின் பெயரால் எவ்வளவோ கூத்துக்கள் ஆடியிருக்கிறார்கள். இன்றும் ஆடவே செய்கிறார்கள். இவர்களது கைவரிசைகளால் மண்ணுக்குள்ளும் விண்ணுக்கும் அனுப்பப்பட்ட இளம் உயிர்கள் தான் எத்தனை. இவை ஊர் உலகிற்கு பகிரங்க இரகசியம். இவற்றில் ஒன்று தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்னும் ஈபி.ஆர்.எல்.எப். ஆகும். இவர்களது ஆட்சிக் காலத்தில் முதல் அமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் ஐந்து வருடகால அஞ்ஞாத வாசத்தை முடித்துக் கொண்டு ஓரிரு மாதங்களுக்கு முன்பு இலங்கை அரசாங்கத்தின் அனுசரனையுடன் நாடு திரும்பினர். அவர் இப்போது மாவட்டம் மாவட்டமாக அரசியல் யாத்திரை செய்து வருகிறார். இந்த யாத்திரை அந்த கட்சிக்குள் பலத்த முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாக அறிய முடிகிறது. அதிலும் குறிப்பாக அதன் செயலாளர் நாயகமான சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு வரதரின் யாத்திரை கசப்பாகவே இருக்கிறதாம். ஏனெனில் சுரேஷ் தலைமையில் அக்கட்சி பல்வேறு முகங்களுடன் தனக்கு ஒரு இடத்தை அரசியலில் நிலைநாட்டிக் கொள்ள முயன்று வந்துள்ளது. தமிழ் மக்களுக்கு சேவை முகம், சிங்கள இடதுசாரிகளுக்கு சிகப்பு முகம், இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு மார்க்சிச முகம், முன்னாள் உறுப்பினர்களுக்கு உதவி முகம், இப்படியாகத் தான் இருந்து வந்த நேரத்திலேயே கரடி புகுந்தது போல் வரதரின் வரவு வருவதாயிற்று.

இந்த வரதர் ஏன் வந்தார்? எப்படி வந்தார்? எதற்காக வந்தார்? என்ன செய்து வருகிறார்? என்பன போன்ற கேள்விகள் பல எழுந்துள்ளன. அவரது வேகமான அரசியல் யாத்திரைகளின் பின்னணி தான் என்ன? ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆள் சேர்க்கிறாரா? அல்லது பாராளுமன்றத் தேர்தலில் குதித்து தேசிய ஜனநாயக நீர் ஓட்டத்தில் நீந்தப் போகிறாரா? எதுவானாலும் அவரது வாலாட்டத்திற்குப் பின்னால் ஒரு பலத்த அரசியல் பின்னணி இருக்கிறது என்பதும் அதற்குரிய வற்றாத வளம் இருக்கிறது என்பதும் உண்மையாகும். அது இந்திய நலன்களுக்குரியதா அல்லது தற்போதைய ஆட்சிக்குத் தேவையானதா என்பதே கேள்வி. எதுவானாலும் மீண்டும் தமிழ் மக்களுக்கு அழிவும் ஆபத்தும் ஏற்படாது இருந்தால் போதுமானதாகும்.

- தவஞானி -

நன்றி - நூலகத்திட்டம்



# அக்கம் பக்கம்

ஐ.ஐ.ஓ

## பிள்ளைகள் தவளைகள் அல்ல

சித்திரை விடுதலை முடிந்து விட்டது. பாடசாலைகளில் இரண்டாம் தவனை தொடங்கி விட்டது. மாணவர்கள் பள்ளிக்கூடம் போய் வருகிறார்கள். ஆசிரியர்கள் படிப்பிக்கப் போய் வருகிறார்கள்.

காண்டாவனத்துக்கு முன்னோடியாக, காற்றுச் சுழற்றி அடித்தது. சற்றுப் பலத்த மழைப்பாட்டங்களும் முகில் மூட்டங்களும் பயங்காட்டிவிட்டுப் பதுங்கிச் சென்று ஒளித்துக்கொண்டு விட்டன. நிலம் குளிர்ந்திருக்கிறது. நல்ல காலம், சில கடூரமான காட்சிகளைக் காண்பதிலிருந்து நாம் காப்பாற்றப்பட்டிருக்கிறோம்.

கடூரமான காட்சிகளா? அப்படி என்ன கடூரம்? எங்கே நடந்தன அந்தச் காட்சிகள்?

வேறொன்றும் அல்ல. குடாநாட்டின் பேருந்துப் பயணிகள், தெருவோரப் பள்ளிக்கூடங்களில் அடிக்கடி காணும் காட்சிகள் தான் அவை. அந்த வேளைகளிலே தான் அனேகமான பள்ளிக்கூடங்களிலே உடற்பயிற்சி விளையாட்டுகள் மும்முரமாக நடப்பதுண்டு.

அந்தப் பள்ளிக்கூட மைதானங்களில் நடப்பவை வழமையான வகுப்புகளோ அல்லது "மெய்வல்லுநர் போட்டிகள்" எனப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்காக நடக்கும் பழக்கப்பயிற்சி ஆயத்தங்களோ தெரியாது. ஆனால், உலர் வலயங்கள் என்று பேசப்படும் இந்த ஊர்ப்பக்கப் பள்ளிக்கூட விளையாட்டுத் திடல்கள், வெக்கை எறிய மணல் துணிக்கைகள் வெயிற்கதிர்களை மேல்நோக்கி வீச, செந்நெருப்பினைத் தகடுசெய்தது போலச் சினங்கொண்டு செயலாற்றுகின்றன. இந்தச் சுபவேளையிலே தான், இளந்தலைமுறையின் உடல் வலுவுக்கு ஊட்டம் தரும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அந்த அகோரப் பயிற்சியின் தீவிரத்தைத்தான், பேருந்துப் பயணிகளாகிய பெருமக்கள் தெருவோரப் பள்ளிகளின் விளையாட்டுத் திடல்களிலே நித்தமும் காண நேர்ந்தது – சித்திரை விடுதலைக்கு முந்திய நாள்களிலே!

இந்தக் காட்சிகளைக் காணும் பாக்கியம் பெற்ற சிலர், தங்களுக்குள்ளே சில கேள்விகளை எழுப்பியிருப்பர்.

விளையாட்டுப் போட்டிகளும் பழக்கப் பயிற்சிகளும் யாருக்காக நடைபெறுகின்றன? ஏன் நடைபெறுகின்றன? பிள்ளைகளுக் காகவா நேரசூசைகளுக்காகவா? ஆசிரியர் களுக்காகவா? அதிகாரிகளுக் காகவா?

"ஆளும் வளர வேண்டும்; அறிவும் வளர வேண்டும்; அது தான் வளர்ச்சி. அதிலே வேலை இல்லை. அறிவு, திறன், மனப்பாங்கு – இவை மூன்றும் வளர்ச்சி பெற வேண்டும். அவைதான் கல்வியின் இலக்குகள்.

உன்னதமான கல்விக்கோட்பாடுகள், இவை. ஒருவரும் மறுக்கமாட்டார்கள். "உடற்கல்வி வேண்டாம்; அது தேவை இல்லை; வீண் வேலை மினைக்கேடு" என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

அதெல்லாம் சரி தான்.

ஆனால், விளையாட்டுப் போட்டிகள் வைப்பதற்கு மிகவும் உகப்பான மாதம் பங்குனி தானா? நியாய புத்தியுள்ள எவர் மனத்திலும் எழக்கூடிய ஒரு சின்னஞ்சிறு கேள்வி இது. "பங்குனி மாதத்துப் பகல் வெயிலில் காய்ந்தவனைப் பார்க்கிறதே பாவம்;" அனுபவசாலிகள் கண்டு சொல்லிவைத்த வசனம். அதையாவது நினைத்துப் பார்க்க வேண்டாமா?

பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்கள், அதிபர்கள், பணியாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அமைச்சர்கள் என்று இருக்கிறார்களே–இந்தப் புண்ணியவான்கள் எங்கிருந்து குதித்தார்கள்? இவர்கள் பிறந்து வளர்ந்தது எங்கே? 'ஆர்ட்டிக்? பிராந்தியத்திலா? அல்லது அதற்கும் அப்பாலுள்ள வடதுருவத்திலே தானா?

பள்ளிக்கூடங்களிலே விளையாட்டும் போட்டிகளை முதலாம் தவணையிலேயே வைத்து முடித்து விட வேண்டும்: இரண்டாம், மூன்றாம் தவணையிலே இவற்றை வைத்துக் காலத்தை விணாக்கினால், படிப்புக் கெட்டுவிடும்: சிலப்ஸ்சை முடிக்க ஏலாது. மாணவர்கள் சோதனைகளிலே நல்லாய்ச் செய்ய மாட்டார்கள், ஆகவே முதலாம் தவனைகள் தான் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஏற்றவை – இப்படி ஒரு கருத்தோட்டம் எங்கள் கல்வி உலகில் உலாவுகின்றது என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். அந்தச் கருத்தோட்டத்துக்கு இசைவாகக் கல்வி அலுவலர்களும் அதிகாரிகளும் ஏதும் கட்டளைகளை விடுத்திருக்கலாம். அல்லது காற்றிலே மிதந்து அலையும் இந்தக் கருத்தோட்டத்தைத் தம் 'நுண்ணுணர்வாலே' கிரகித்துக் கொண்டு, கோட்டங்களும் வலயங்களும் திணைக்களங்களும் செயலகங்களும் அமைச்சுக்களும் இதனை "எழுதா விதியாக ஏற்றுக்கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட எழுதாவிதிகளைச் சிரமேற்கொண்டும் அவை ஒழுகியிருக்கலாம்.

எது எப்படியோ! பிள்ளைகள் வெள்ளை வெயிலிலே பொரிக்கப் பட்டு, உடல் வலுவிலும் போட்டி வேட்டைகளிலும் ஊட்டம் பெற்று வருவது உண்மை.

கல்விக் கோட்பாட்டாளரும் நிபுணர்களும் கல்வி இயல் அறிஞர்களும் 'தள நிலைமைகளைச்' கருத்திற் கொள்வது மிகவும் அருமை இது ஏன்?

வறுத்தும் பொரித்தும் வல்லமை கூட்ட வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் எங்கள் பெரியவர்கள், நம் ஊர்களின் பருவகாலங்கள், வெயில்–பனி, மழை–புயல் ஆகிய வானிலைச் சுற்றோட்டங்கள், உயர்ந்த பட்ச குறைந்த பட்ச வெப்பநிலைகள் முதலான காரணிகளை ஏன் கணக்கில் எடுப்பதில்லை?

ஒரு வேளை கல்விக் கோட்பாட்டு நூல்கள் இவைபற்றி ஒன்றும் சொல்வதில்லைப் போலும் பிள்ளை–மையக் கல்வி என்று ஒரு பண்டம் சில நூல்களிலே பேசப்படுகிறதாமே! சில பேர் சொல்லுகிறார்கள்.

அவற்றை எல்லாம் படிக்கலாம் – பயிற்சிப் பட்டறைகளிலும் செயலமர்வுகளிலும் பணிக்களங்களிலும் அவற்றைப் பற்றிப் பறையலாம் அதாவது சொல்லாடல் நடத்தலாம். ஆனால் உன்னதமான கோட்பாடுகளைக் கடைப் பிடிக்கலாமா? கூடாது, கூடாது.

உடற்கல்வியைப் பொறுத்தமட்டிலே தான் பிள்ளைகள் பரிசோதனைப் பொருள்களாகிறார்கள் என்பதில்லை. இதயம் எப்படித் துடிக்கிறது என்பதைக் காண்பதற்காகத் தவளையைக் கீறிக் குண்டுசியாலே குத்தி முக்கால் உயிரில் வைத்திருப்பதுண்டு தானே – ஆய்வுகூடங்களில்? ஆங்கொல்லாம் தவளைகள் பரிசோதனைப் பொருள்கள், ஆய்வுகூடத்துச் செயப்படுபொருள்கள். எங்கள் இலங்கைத் திருநாட்டிலே, மனிதப் பிள்ளைகள் கல்விப் பரிசோதனைக்கு நிரந்தரமாக உள்ளாக்கப்படும் செயப்படுபொருள்கள்.

தொடர் கணிப்பீடு, செம்புள்ளி, பசும்புள்ளி, மஞ்சற்புள்ளி, கரும்புள்ளி, பதிவேடுகள், முன்னோடிப் பீட்சைகள், பின்பதுங்கற் பீட்சைகள் என்று, ஆட்சி பீடமேறும் ஒவ்வொரு வீரவானும் தன்தன் புத்திக்கு எட்டியவரை, தன் தன் பதவிவலு செல்லுபடியாகும் கால எல்லை வரை, பல்வேறு புதுப்புதுத் திட்டங்களை முன்வைத்து ஒவ்வொரு பரிசோதனையை நடத்துகிறான். பரிசோதனைகள் பெரும்பாலும் பாதிவழியில் நின்று விடுகின்றன. இதில் அகப்பட்ட 'செயப்படுபொருள்களாகிய' பிள்ளைகள், அடுத்து வரும் புதிய பரிசோதனைக் கூடத்தில் அகப்பட்டுக் கொள்கின்றன.

## 83ன் யூலை இனவன்முறையும் ஜே.ஆர். விதைத்த விதைகளும்

இலங்கை இந்த நூற்றாண்டில் சந்தித்த இனவன்முறைகளில் மிக மோசமானது 83 யூலையில் இடம் பெற்ற இனவன்முறையாகும். 1915ல், 58ல், 77ல், 79ல், 81ல், ஆண்டுகளின் வரிசையில் தான் 83ன் யூலை இனவன்முறை ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்,தலைமையில் நடாத்தப் பட்டது. இந்த இனவன்முறை இலங்கையின் அரசியல் பொருளாதார சமூக கலாசாரக் கட்டமைப்பில் பாரிய எதிர் விளைவுகளைத் தோற்றுவித்து வளர்த்துக் கொண்டது, நாடு முழுவதிலும் பரந்து வாழ்ந்த தமிழர்கள் அனைவரையும் குறி வைத்துத் தாக்கி கொலைகள், படுகாயங்கள், கொள்ளைகள், எரிப்புக்கள், உடைப்புகள் என்பனவற்றுக்கு உள்ளாக்கியது. ஐக்கிய தேசியக் கட்சிக் குண்டர்கள், ராணுவ, பொலீஸ் படையில் உள்ளோர் இரத்தக்காட்டேறிகளாகி நின்றனர். சிறைக்குள்ளும் ஒரு தடவை அன்றி இரு தடவைகள் கொலை வெறி தாண்டவமாடின.

இலங்கைத் தமிழர்கள் வடக்கு கிழக்கு நோக்கி தள்ளப்பட்டனர். மலையகத் தமிழர்களின் ஒரு பகுதியினர் இந்தியா செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். தமிழர்களுக்குப் பாடம் புகட்டவென நடாத்தப்பட்ட இவ் இனவன்முறை இனிமேல் சிங்களவர்களுடன் இணைந்து வாழ முடியாது என்னும் விரக்தி நிலைமையைத் தோற்று வித்தது. அடிக்குத் திரும்பி அடிப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்ற தீர்க்கமான முடிவை எடுக்க வைத்தது. அதன் வழியில் தீவிரவாதப் பாதையில் தமிழ் இளைஞர்கள் இயக்கங்கள் ஆகினர். இந்திய மேலாதிக்கம் அவர்களை தனது நோக்கத்திற்கு பயன்படுத்திக்கொண்டது. ஒரு உள்நாட்டு யுத்தத்தை நோக்கி இலங்கை தள்ளப்பட்டது. நாட்டைவிட்டும் சொந்த ஊர்விட்டும் மக்கள் அகதிகளாகி இடம் பெயர்ந்தனர். உயிர் உடமை இழப்புக்கள் தொடர்ந்தன. ஆரம்பத்தில் வடக்கு கிழக்கிலும் தமிழ் மக்களையும் உள்ளடக்கிய பேரினவாத யுத்தம் கால கெதியில் முழுநாட்டையும் முழு மக்களையும் பாதிக்கும் பயங்கர யுத்த சூழலாக வளர்ந்து கொண்டது.

83ன் இனவன்முறை தொடக்கிவைத்த பேரினவாத யுத்தம் இன்று ஆளும் உயர்வர்க்க சக்திகளினதும், பேரினவாத யுத்த வெறியர்களினதும் அவர்களோடு கைகோர்த்து நிற்கும் ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளது தேவைக்கான தாகக் தொடர்ந்து கொண்டு செல்கின்றது. இலங்கையின் முதல்தர பிற்போக்குவாதியும் அமெரிக்க ஏகாபத்திய அடிவருடியுமான ஜே.ஆர். வழிநடாத்திய '83 யூலை இனவன் முறையின் எதிர் விளைவுகள் முழு நாட்டையும் இன்று யுத்த வடிவில் அரித்துத் தின்று கொண்டிருக்கிறது. இதனை ஆளும் தரப்பில் இருந்து எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலையில் லட்சோப லட்சம் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்களது யுத்த எதிர்ப்பு எழுச்சியிலேயே யுத்தத்தை நிறுத்தும் சக்தி தங்கி உள்ளது. அத்தகைய பரந்த வெகுஜன எழுச்சியையும் போராட்டத் தையும் யுத்தத்திற்கு – பேரின வாதத்திற்கு எதிராக முன்னெடுப்பதே இன்றைய அவசியம் தேவையாகும்.

## வீரவிதான இயக்கமும் எதிர்ப்பு வீரர்களும்

வீரவிதான இயக்கமும், பயங்கரவாத தேசிய எதிர்ப்பு முன்னணியும் வெறித்தன நடவடிக்கைகளும் நாடறிந்ததே. இந்த பேரினவாத வெளி கொண்ட இயக்கங்களுக்கு வெளியில் இருந்து பணக் கட்டுகள் அத்துடன் ஆலோசனைகள் கிடைத்து வருவதாகக் கூறப்படுகிறது. நாட்டை முடிவுறாத யுத்தத்தில் வைத்திருக்கவும் இனங்களுக்கிடையே உறவுகளை மோசமாக்கவும் அச் சூழலை தமது மேலாதிக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்வதற்காகவுமே அயல் நாடொன்று பின்னின்று இயக்குவதாகப் பேசப்படுகிறது.

இத்தகைய வீரவிதான இயக்கத்திற்கு தீனி கொடுப்பது போன்று சில தமிழ் அமைப்புகளும் அண்மையில் வீரவிதான இயக்கத்திற்கு எதிராக ஆலோசனைக் கூட்டப்பட்டது. அதில் இந்திய வம்சாவழிப் பேரணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் மனோ கணேசன், பா.உ.ஆர்.யோகராஜன், குமார் பொன்னம்பலம், போன்றோர் வீர வசனங்கள் முழக்கி ஊர்வலம், மறியல் என சவால் விட்டு பின் ஒத்திவைத்து ஒதுங்கியோ ஒழிந்தோ கொண்டனர். தீர்மானம் எடுக்கும் முன்பு நிதானமாக சிந்தித்து முடிவு மேற்கொள்ளவேண்டும். முடிவு எடுத்தால் இறுதிவரை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாது வெறும் சுயவிளம்பரத்திற்காகவும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் நிற்பதற்காகவும் மனோ கணேசன் போன்றவர்கள் அரசியல் கற்றுக் குட்டிகளாகவே நடந்து கொண்டனர். அதன் எதிர் விளைவு வீரவிதான போன்ற பேரினவாத சக்திகளை உசார்ப்படுத்துவதாகவே அமைந்து விட்டது. பேரணிக்கோ அதன் தலைவர்களுக்கோ பேரினவாத சக்திகளை எதிர்க்கும் துணிவு இல்லை. பதிலுக்கு பேரினவாத சக்திகளை உசார்ப்படுத்துவதாகவே அமைந்து விட்டது. பேரணிக்கு யோக்கியதை எப்படி வரமுடியும். மக்களை ஏமாற்றப் போய் தமது வேஷங்களை அம்பலப்படுத்திக் கொண்டமைதான் மிச்சம்.

- ம. வேணுகோபால் -

## அம்மணியும் செம்மணியும்

ஆட்சி அதிகாரத்தில் உச்சத்தில் இருந்து வரும் அம்மணியானவர் 1994ல் தெற்கே சூரியகந்த புதைகுழிகளை கட்டாயப்படுத்தி முன்னின்று தோண்டினார். அதனால் பதவிக்கு வந்தார். ஆனால் வடக்கே செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்படுவதை அதே அம்மணியானவர் விரும்பவில்லை. காரணம் முன்னையவை யூ.என்.பி. காலத்தில் ராணுவத்தின் செயல். பின்னயவை பொதுசன முன்னணி கால்த்திய ராணுவத்தின் செயல்.

ஆனால் செம்மணி பற்றிய உண்மை வெளிவரவே செய்தது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல் கிரிஷாந்தி கொலை வழக்கின் முடிவில் சோமரத்தின ராஜபக்ஷ என்ற இராணுவ சிப்பாய் செம்மணி பற்றிய வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தெரிவித்து விட்டார். அதன் விளைவே இன்று செம்மணிப் புதைகுழிகள் திறக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை தோற்றுவித்தது. இங்கு குறிப்பிடக்கூடியது யாதெனில் ஒரு சிங்கள இளம் சிப்பாயின் இறுதி நேர மனச்சாட்சியுடன் கூடிய துணிகரமான வாக்கு மூலமாகும். இன உணர்வு என்ற மாயையும் கடந்து தாய் நாட்டுக்கான யுத்தம் என்ற கட்டுக் கதையையும் மறுத்து தனது மனச்சாட்சியின் படி நடந்துள்ளார் என்றே கூற வேண்டும். அவரது வாக்கு மூலத்தில் உள்ளவற்றை நம்ப மறுத்தவர்கள் அவர் நேரில் சென்று காட்டிய இடத்தில் கையும் மெய்யுமாகவே இரண்டு எலும்புக் கூடுகள் கிடைத்தவுடன் அதிர்ந்து போய் விட்டனர். அந்த ராணுவ சிப்பாய் இன்று தண்டனை விதிக்கப்பட்ட கைதி. ஆனால் யுத்தத்திற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்களின் அவல நிலைக்கான ஒரு தெளிவு மிக்க குறியீடாகவே காணப்படுகிறார். இவ்விடத்தில் அரசு யந்திரம் – ராணுவம் – அரசாங்கம் – ஆட்சித் தலைவர்கள் என்பனவற்றையும் சாதாரண சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்களைப் பற்றியும் ஆழ்ந்து பகுத்தாராய்ந்து பார்ப்பது பயன் உள்ளதாகும்.

அம்மணியானவர் என்றாலும் சரி முன்னைய புதைகுழி மன்னர்களான யூ.என்.பி. என்றாலும் சரி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு செம்மணியை எவ்வாறு பிரசாரம் செய்யப் போகிறார்கள் என்பதை அவதானித்துப் பார்ப்போம். ●

நன்றி - நூலகத்திட்டம்



# இந்தியா பாகிஸ்தான் காஷ்மீர்

காஷ்மீர் பிரச்சினையை இந்திய – பாகிஸ்தான் பிரச்சினையாக மட்டுமே காண்பது பல தவறான முடிவுகட்கு இடமளிக்கும். 1947ல் காஷ்மீர் பகுதி பாகிஸ்தானிடம் போகாமல் இந்திய அரசாங்கம் வஞ்சனையாலும் இராணுவ வலிமையாலும் தடுத்தது. காஷ்மீரில் ஒரு பகுதி ஆஸாத் காஷ்மீர் என்ற பேரில் பாகிஸ்தானின் ஆளுமையின் கீழும் பெரும்பாலான மக்களை கொண்ட பகுதி இந்தியாவின் கீழும் இருந்து வந்துள்ளன. யுத்த நிறுத்தத்தின் பின்பு ஆளுமைக்குட்பட்ட எல்லைக்கோடு போகக், கணிசமான ஒரு பகுதி வரையறுக்கப்படாமலே உள்ளது.

இஸ்ரேல் எவ்வாறு பல் வேறு ஐ.நா.பொதுச் சபைத் தீர்மானங்களை உதாசீனம் செய்து பலஸ்தீன மண் முழுவதன் மீதும் தனது முரட்டு அதிகாரத்தைச் செலுத்துகிறதோ அவ்வாறே இந்தியாவின் நடத்தையும் காஷ்மீர் விடயத்தில் அமைந்துள்ளது. சர்வசன வாக்கெடுப்பின் அடிப்படையிலேயே காஷ்மீரின் எதிர்காலம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை இந்தியா வன்மையாக எதிர்த்து வந்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினையைக் காரணம் காட்டி இந்தியாவும் பாகிஸ்தானும் மோதுவது இதுதான் முதற்தடவையுமலல்ல. இந்தியாவின் ஆட்சியாளர்களோ பாகிஸ்தான் ஆட்சியாளர்களோ இம் மோதல்களில் நேர்மையாக நடந்து கொண்டார்களோ என்பது இன்றைய பிரச்சினையும் அல்ல. இரு நாடுகளிலும் போர் மூலம் தேசபக்தி என்ற வெறி ஏற்றப்பட்டு நாட்டின் முக்கியமான பிரச்சினைகள் ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளது.

1971ல் இன்றைய பங்களாதேஷான கிழக்கு பாகிஸ்தானில் இந்தியா குறுக்கிட்டது பற்றி இரகசியம் இல்லை. பாகிஸ்தானின் பிரிவினை இந்தியாவின் மேலாதிக்க நோக்கத்துக்கு மேலும் உதவியதோடு இந்திய ஆட்சிக்குட்பட்ட காஷ்மீரை மேலும் இறுக்கமாக இந்திய ஆட்சியின் கீழ்க் கொண்டுவரவும் வசதி செய்தது. கிழக்கு பாகிஸ்தானின் மக்களது வங்காளி தேசிய இன உணர்வையும் பொருளாதாரக் தேவைகளையும் பாகிஸ்தான் ஆட்சியானது மதிக்காமல் குரூரமான சுரண்டலையும் ஒடுக்குமுறைகளையும் அனுமதித்ததாலேயே பங்களாதேஷ் பிரிய நேர்ந்தது. அதே வேளை இந்தியக் குறுக்கீடு எவ்வகையிலும் நியாயப்படுத்தக் கூடிய நடவடிக்கையல்ல. சோவியத் யூனியனின் அனுசரனையுடனேயே இந்தியாவால் இப்படியான ஒரு காரியத்தைச் செய்ய முடிந்தது.

சிக்கிமையும் இந்தியா 1974ல் தன்னுடன் இணைந்துக் கொண்டது. பூட்டான் மீதும் நேபாளத்தின் மீதும் இந்தியாவின் நெருக்குவாரம் மிகவும் கடுமையாகவே இருந்து வருகிறது. நேபாளத்தில் வெகுசனங்கள் நடுவே இந்திய எதிர்ப்புணர்வு ஓங்கி வருகிறது. பூட்டானின் சர்வாதிகார ஆட்சி இந்தியாவின் தயவில் அதிகாரத்தில் தொடர்வதுடன் தேசிய சிறுபான்மையினர் மீதும் ஜனநாயக சக்திகள் மீதும் அடக்குமுறைப் பிரயோகித்து வருகிறது.

இந்த விதமான சர்வதேச அரசியல் நடத்தையைக் கொண்ட இந்தியா தான் இன்று பாகிஸ்தான் ஊடுருவற்காரர்கள் பற்றிக் கண்டனம் தெரிவிக்கிறது. காஷ்மீரில் சுயநிர்ணயம் கோரியும் சுயாட்சிக்கும் சுதந்திரத்திற்காகவும் காஷ்மீர மக்களின் ஏகப் பெரும்பாலான பகுதியினர் கடந்த 50 வருடமாகப் போராடி வருகின்றனர். சுதந்திரம் கோரிய ஷேக் அப்துல்லாவை ஜனநாயக நேரு ஆட்சி சிறையில் அடைத்தது. எசமானர்கள் எவ்வாறு சீக்கியரது சுயாட்சிக் கோரிக்கையை மறுத்து மாஸ்ற்றர் தாரா சிங் என்ற தலைவரைச் சிறையிலிட்டு இன உறவுகளை மேலும் மோசமாக்கினார்களோ அதே விதமான அணுகுமுறை மூலம் காஷ்மிர மக்களையும் பிளவுபடுத்திச் சினமூட்டியிருக்கிறார்கள், இதன் விளைவாகக் காஷ்மீர் பிரச்சினையின் அடையாளம் இன்று மிகவும் மாறிவிட்டது.

காஷ்மீர் மக்கள் இன்று வேண்டுவது பாகிஸ்தானுடனான இணைவல்ல. சில இயக்கங்கள் பாகிஸ்தான் ஆதரவைப் பெறுவது உண்மை. இஸ்லாமிய தீவிரவாதிகள் சிலர் மும்முரமாக இயங்குவதும் உண்மை. ஆயினும் பிரதானமான போக்கு சுய நிர்ணயத்திற்கான போராட்டமே. இந்திய யூனியனுடன் கட்டாயமாகப் பிணைக்கப்பட்ட காஷ்மீர் மக்கள் வேண்டுவது சுதந்திரமான தெரிவு. இது அவர்களது பிறப்புரிமை. இங்கு இந்திய ஆட்சியாளர்கள் முன்னுள்ள தெரிவு அந்த உரிமையை நசுக்கி மக்களை ஒடுக்குவதற்கும் அதை மதித்து காஷ்மீர் மக்களின் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிக்க அனுமதிப்பதற்கும் இடையிலானது.

எக்காரணத்தாலோ இந்திய பிற்போக்குவாதிகள் முதல் கம்யூனிஸ்ட் கட்சிகள் எனப்படும் இரண்டு பெரிய அமைப்புக்கள் வரை காஷ்மிர் இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதி என்ற மூர்க்கத்தனமான நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்றன. இது காஷ்மீரில் ஒடுக்குமுறை ஓங்குவதற்கே வழிவகுத்துள்ளது. விலக்காகச் சில முற்போக்குச் சக்திகளும் மாக்ஸிய – லெனினியக் குழுக்களும் காஷ்மீர மக்களது சுயநிர்ணய உரிமையை முற்றாக அங்கீகரிக்கிறார்கள். காஷ்மீரில் கடந்த 20 ஆண்டுகளுள் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டம் துரிதமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் அடிப்படையான காரணத்தைக் கவனிக்காமல் வெறுமனே தனிப்பட்ட வன்முறைச் சம்பவங்களையும் சில அசம்பாவிதங்களையும் காரணம் காட்டி முழுப் போராட்டத்தையும் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி ஒதுக்கும் போக்கே ஓங்கியுள்ளது. இதன் மூலம் இந்திய ஆளும் வர்க்கம் காஷ்மீரில் பிரயோகிக்கிற எந்த மக்கள் விரோத வன்முறையையும் நியாயப்படுத்த முடிகிறது.

பாகிஸ்தானின் நேரடியான குறுக்கீடு காஷ்மீர மக்களது விடுதலைக்குப் பாதகமானது. ஆயினும், எவ்வாறு தமிழகத்தில் ஈழத்தமிழரது போராட்டத்திற்கு ஆதரவு இருக்க முடியுமோ, எவ்வாறு அரபு மக்கள் நடுவே பாலஸ்தீனப் போராட்டத்திற்கு ஆதரவு இருக்க முடியுமோ, எவ்வாறு ஐரிஷ் விடுதலைக்கு அமெரிக்காவில் உள்ள ஐரிஷ் மக்களது ஆதரவு இருக்க முடியுமோ அவ்வாறு அல்லது அதற்கும் மேலாக பிளவுண்ட காஷ்மீரின் இரு புறத்திலும் உள்ள மக்களிடையில் இணைவுக்கான வேட்கை இருக்கும். அது மட்டுமின்றி இந்திய மேலாதிக்கத்தின் அடக்குமுறையின் பின்னணியில், பாகிஸ்தானில் வெகுசன ஆதரவும் இருக்கும். இவற்றை இந்திய ஆட்சியாளர்களோ பாகிஸ்தான் ஆட்சியினரோ தடுக்க முடியாது.

இந்தியாவின் தரப்பிலான வாதங்களே நம்மை அதிகம் வந்தடைகின்றன. பாகிஸ்தான் 1989ல் இந்தியாவினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் பற்றிக் கூறுவதை இன்றைய மோதலிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. மேலை நாடுகளின் ஆதரவு இந்தியாவுக்கு இருப்பதன் பொருள் இந்திய நிலைப்பாடு சரியானது என்றாகிவிடுமானால், இன்னும் எத்தனையோ கொடுமைகளும் நியாயமாகிவிடும்.

இவை ஒருபுறமிருக்க இந்தியாவின் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாடென்ன வென்றால் பாரதிய ஜனதா கட்சியின் கவனயீனமே பாகிஸ்தான் 'ஊடுருவலுக்கு' வழி வகுத்தது என்பதாகும். இந்திய முதலாளித்துவத்தை மட்டுமின்றி இந்திய மேலாதிக்கத்தையும் தாங்கள் முதலாளியக் கட்சிகளை விடச் செம்மையாகப் பேணக்கூடியவர்கள் என்ற போக்கு மாக்ஸியத்தின் வழிப்பட்ட ஒன்றாகாது. இத்தகைய அணுகுமுறை முன்பு சில ஐரோப்பிய சோஷலிஸக் கட்சிகளால் கடைப்பிடிக்கப்பட்ட போது அவர்களைக் குறிக்க லெனின் பாவித்த சொற்தொடர் 'சமூக ஏகாதிபத்தியம்' அந்த அவலம் தம்மை மாக்ஸியவாதிகள் என்பவர்கட்கு நேரலாமா? ●

# துருக்கிய பாசிச ஆட்சியே! ஒக்காலனை விடுதலை செய்!

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு சதி சூழ்ச்சி காரணமாக கைது செய்யப்பட்டு துருக்கிய பாசிச ஆட்சியால் தனித் தீவில் சிறை வைக்கப்பட்டவர் அப்துல்லா ஒக்காலன் குர்திஷ் தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகரும் தலைவருமான ஒக்காலன். கடுமையான சித்திரவதைகளுக்கு மத்தியில் துருக்கியின் ராணுவ பாசிச நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு போலியான விசாரனை மூலம் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளார்.

தோழர் ஒக்காலன் குர்திஷ் தொழிலாளர் கட்சியின் தலைவர். சிறந்த மாக்சிச லெனினிசவாதி. அவர் ஒடுக்கப்படும் குர்திஷ் மக்களின் விடுதலைக்கான குரலாகவும் அடையாளமாகவும் திகழ்பவர். ஒக்காலனை தூக்கிலிடுவதன் மூலம் குர்திஷ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முடியாது. அமெரிக்காவும் அதன் அடிவருடியான துருக்கிய பாசிசவாதிகளும் குர்திஷ் மக்களிடமிருந்து துருக்கிய மக்களிடமிருந்தும் தப்ப முடியாது. இக்கயவர்களுக்கு மக்கள் தூக்குத் தண்டனை விதிக்கும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை.

தோழர் அப்துல்லா ஒக்காலனுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ரத்து செய்து அவரை விடுதலை செய்யுமாறு உலகம் பூராவும் ஓங்கி ஒலிக்கும் மக்கள் குரல்களுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

## மலையக இளைஞர்

முன் பக்க தொடர்ச்சி....

பாதிக்கப் படுகின்றனர். என்பதோ, மலையகத்தவர்க்ளும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதோ வெளியுலகிற்கு தெரியாமலே இருக்கின்றது.

மலையகத்தவர்களின் பொருளாதார நிலை மிகவும் மோசமானது என்பதாலும் மேற்படி கைதுகள், தடுத்து வைப்புகளுக்கு எதிராக எதனையும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

எனவே மலையகத்தவர்களின் கைதுகள் தடுத்து வைப்பு சித்திரவதைகளுக்கு எதிராக பல விதங்களில் துரித நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

அரசியல் ரீதியாக பதவிகளில் இருக்கும் அரசியல் வாதிகள் மட்டுமின்றி ஏனையவர்களும் ஐக்கியப்பட்டு அரசியல் நிகழ்ச்சி நிரலை தயாரித்து செயற்பட வேண்டியவர்களாகின்றனர். ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள் தொடக்கம் பாராளுமன்றத்தில் அவரது காலசட்டத்திற்கு எதிராக வாக்களிப்பது உட்பட பல விடயங்களுக்கு விரிவுபடுத்த முடியும். இதன் மூலமே மலையக இளைஞர் யுவதிகள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள விவகாரத்தை வெளியே கொண்டு வந்து அவர்களை விடுவிக்கும் அழுத்தங்களை அரசிற்கும் உலகிற்கும் உணர்த்தமுடியும்.

சட்ட ரீதியாக தனிப்பட்ட சட்டத்தரணிகளும் மனித உரிமை அமைப்புகளும் இவ்விடயத்தைச் செய்ய முன்வர வேண்டும். இனவாத, போர்ச் சூழ்நிலையில் மலையக சட்டத் தரணிகள் ஒதுங்கி நிற்க முடியாது. அவ்வாறு ஒதுங்கி நிற்பதால் மட்டும் இனவாத ரீதியாக அவர்களின் தொழிலுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுத்து நிறுத்தவும் முடியாது. சட்ட நடவடிக்கைகள் கூட திட்டமிட்டு ஒரு இயக்கமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதில் மலையக சட்டத்தரணிகள் மட்டுமின்றி ஏனைய சட்டத்தரணிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாக மலையகத்தவர்களின் கைதும் தடுத்து வைப்பும் பற்றி பிரசாரப்படுத்தப்படல் வேண்டும். நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர் யுவதிகளை விசாரணை செய் அல்லது உடனடியாக விடுதலை செய் என்னும் இயக்கத்தை ஆரம்பிப்பதே உடனடிக் கடமையாகும்.

## யுத்தத்தை-தனியார்

முன் பக்க தொடர்ச்சி..........

தன்னடையாளங்கள் பாதுகாக்கப்படுவதையும் அரசியலமைப்பில் இணைப்பதை ஒத்துக் கொள்வார்களா?

இவற்றுக்குத் தயார் இல்லாத நிலையில் ஜனாதிபதி முறைமையை ஒழிக்குமாறு அதனைக் கொண்டு வந்து பதினேழு வருடங்களாக அதன் கீழ் சர்வாதிகார காட்டாட்சி புரிந்த யூ.என்.பி. ஆர்ப்பாட்டம் செய்வது வெறும் பம்மாத்தேயாகும். தனது உட்பூசல்களை மறைக்கவும் அடுத்த தேர்தல்களில் அதிக் வாக்குகளைக் கவர்வதற்காகவே இவ் ஆர்ப்பாட்ட நாடகம் நடத்துகிறார்கள். ஜே.வி.பி ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பிற்காக மொட்டையாக இயக்கம் நடாத்துவது வாக்கு வங்கியை வளப்படுத்தி பலப்படுத்தி பலப்படுத்தவேயாகும்.


அதேவேளை ஆளும் பொதுசன முன்னணியும் ஜனாதிபதியும் தமது தேர்தல் கால வாக்குறுதியை நான்கு வருடத்தில் நடைமுறைப்படுத்த முடியாமல் போனமை யூ.என்.பி ஆதரவு வழங்காமையினால் மட்டும் அல்ல. மிக முக்கிய காரணம் அமெரிக்க – மேற்குலக நிர்ப்பந்தமாகும். அதனால் தான் யூ.என்.பி யும் ஆதரவு வழங்க மறுத்து வருகின்றது. ஏனெனில் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் விருப்பத்தை நிறைவேற்றவே அன்று ஜனாதிபதி முறை கொண்டு வரப்பட்டது. இன்றும் அவர்களுக்கே அது சேவை செய்கிறது. எனவே யார் அடுத்து பதவிக்கு வந்தாலும் கூட அந்த முறை மாற்றப்படுவதை அமெரிக்காவும் அவர்களது உள்நாட்டு சகாக்களும் விரும்பப் போவதில்லை.

எனவே உண்மையாகவும் நேர்மையாகவும் ஜனாதிபதி முறைமையை ஒழித்துக் கட்டக்கோரும் எவரும் யுத்தம் – தனியார்மயம் – தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு ஆகியவற்றையும் இணைத்த பரந்த மக்கள் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும். அத்தகைய மக்கள் இயக்கத்தினாலேயே ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதனை நேர்மையான இனவாதமற்ற இடதுசாரி சக்திகளாலேயே முன்னெடுக்க முடியும். ●


## வெளிவந்து விட்டது

புதிய ஜனநாயக கட்சியின்

தத்துவார்த்த ஆங்கில இதழ்




விபரங்களுக்கு:

South Asian Books
44, 3rd Floor, CCSM Complex,
Colombo 11.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI පුදිය පුමි

சுற்று 06 யூன்/யூலை 1999 பக்கம் 8 விலை ரூபா 10/= சுழற்சி 29


## கண்ணி வெடிகளைத் தந்தவர்கள்

குட்டா நாட்டில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் மிதிவெடிகளின் தொகை பத்தாயிரத்திற்கு மேல் உள்ளன. இவற்றை கண்டறிந்து அகற்றி அழிக்க மேற்குலக மனிதாபிமான உதவியுடன் ஐ.நா.குழுவினர் வந்துள்ளனராம். நமது நாட்டில் இனப்பிரச்சினையை வளரவைத்து யுத்தத்தை பின்நின்று மூட்டி ஆயுதங்கள் வெடிமருந்துகளை விற்று கொள்ளை லாபம் பெற்ற அதே முதலாளிய நாடுகள் தான் இப்போது மனிதாபிமான உதவி என்று உரத்துக் கூவிக் கொண்டு தாங்களே கொடுத்த கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு வந்துள்ளார்கள். இதுதான் ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டல். இதுதான் முதலாளிய மனிதாபிமானம்.

# பேரினவாதிகளுக்குப் போர் தேவை மக்கள் சமாதனத்தை வேண்டுகின்றனர்

1983ம் ஆண்டு 23ம் திகதி திருநெல்வேலியில் பதின்மூன்று ராணுவத்தினர் கண்ணி வெடித்தாக்குதலில் கொல்லப்பட்டனர். இவ்வளவு தொகையில் ஒரே இடத்தில் ராணுவம் கொல்லப்பட்டது வடக்கு கிழக்கில் அதுவே முதல் சம்பவமாகும். அதனைச் சாட்டாக வைத்தே 83ன் இனவன்முறை திட்டமிட்டு நாடு முழுவதிலும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்த விடப்பபட்டது. ஆயிரக்கணக்கான தமிழர்களும் கோடிக் கணக்கான சொத்துகளும் பேரினவாத வெறிக்கு இரையாக்கப்பட்டது. அன்று தொடங்கி வைக்கப்பட்ட பேரினவாதிகளின் போர் வெறி முழக்கம் - இன்றும் அடங்கி விடவில்லை. அது தொடரும் யுத்தத்தில் எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது.

இவ் இனப் போர் காரணமாக தமிழ் முஸ்லீம் மலையக மட்டுமின்றி சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டு களைத்து விட்டனர். பாதிக்கப்பட்டு நிற்கும் அனைத்து மக்களுக்குமே இன்று சமாதானம் அவசியமான ஒன்றாகியுள்ளது. குறிப்பாக சிங்கள மக்கள் யுத்தத்தின் பாதிப்பு ஒவ்வவொன்றையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்ப காலங்களில் போர் பற்றி சிங்கள மக்கள் ஏனோதானோ என்றே இருந்து வந்தனர். ஆனால் நாளடைவில் போர் பல்வேறு வழிகளிலும் அவர்கள் ஒவ்வொருவரது வீடுகளையும் வந்து அடைந்து கொண்டது. அதுவும் சாதாரண உழைக்கும் மக்கள் வாழ்வில் நிரந்தர துன்பத்தையும் சோகத்தையும் இல்லாமையையும் உருவாக்கி உள்ளது.

எல்லைப்புற சிங்கள மக்கள் உயிர் உடமைகளை இழந்து இடங்களை விட்டு அகன்று அகதிகளாக முகாம்களில் வாழ்கின்றனர். எல்லைப் புறங்களின் உட்கிராமங்களில் வாழும் சிங்கள மக்கள் ராணுவத்தின் பல்வேறு தொல்லைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்கிறார்கள். குறிப்பாக சிங்களப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு என்பது இப் பிரதேசங்களில் மிக மோசமான பிரச்சினையாகியுள்ளது. மேலும் தமது பிள்ளைகளைப் போர் முனைகளில் இழந்த சிங்களப் பெற்றோர் நிரந்தரத் துன்பத்தில் மூழ்கியுள்ளனர். தமது கணவன்மாரை இழந்த இளம் சிங்களப் பெண்களினதும் தமது தந்தையரை இழந்த பிள்ளைகளினதும் எண்ணிக்கை நாளாந்தம் கூடிக்கொண்டே செல்கிறது. அத்துடன் இறந்த செய்தி உறுதியானால் ஒருவகைச் சோகம் ஆனால் காணாமல் போய் இருக்கிறார்களா இல்லையா என்பதை அறியமுடியாது தவிக்கும் பெற்றோர் மனைவிமார் பிள்ளைகளின் நிலை பரிதாபத்திற்குரியதாகும். இச் சந்தர்ப்பத்தில் தான் தமது வேதனையை மனநிலையை ஒத்த தமிழ் மக்களைப் பற்றி சிங்களப் பெற்றோரும் உறவினரும் அனுபவ ரீதியாக உணருகின்றனர். இந்நிலையிலேயே தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி சிங்கள மக்களுக்கும் சமாதானத்தின் அமைதியின் அவசியம் தேவைப்படுகிறது. அதனைப் பல்வேறு வகையிலான இயக்கங்களின் மூலம் அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் வலுவடைந்து வரும் சமாதானக் குரலை நசுக்கவும் திசைதிருப்பவும் வீரவிதான இயக்கமும், பயங்கரவாத தேசிய எதிர்ப்பு முன்னணியும் பேரினவாத போர் வெறிப்பிரசாரங்களில் தீவிரமாகி நிற்கிறது. அன்று கொல்லப்பட்ட பதின்மூன்று ராணுவ வீரர்களுக்கு நினைவுநாள் கொண்டாடப் படவேண்டும். அது தமிழர்களுக்கு அச்சுறுத்தலாக அமைய வேண்டும் என்ற கருத்து வதந்தி வடிவில் பேரினவாதிகளால் பரப்பப்பட்டு வருகின்றது. அண்மையில் கண்டி நகரில் வீரவிதான இயக்கத்தின் நாலாவது மாநாடு நடைபெற்றுள்ளது. அங்கு ஆற்றிய உரைகளும் எடுத்த தீர்மானங்களும் பேரினவாதப் போர் வெறியை தூண்டி இறுதிவரை போரை முன்னெடுக்குமாறு வற்புறுத்தியுள்ளது. எனவே போரா? அல்லது சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கும் பாரிய பொறுப்பு இன்று சிங்கள மக்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதே இன்றை நிலையாகும். ●

## வன்னிப் பாதையை மூடி மக்களை வதைப்பது ஏன்?

வன்னியில் ராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையை சாட்டாக வைத்து வன்னிக்கான பாதைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. ஒரு மாதத்திற்கு மேலாகியும் பாதை திறக்கப் படாமையினால் போக்கு வரத்தும் உணவு, மருந்து, எரிபொருள் போன்ற அத்தியாவசிய செயற்பாடு அனைத்தும் முடக்கப் பட்டுள்ளன. ராணுவத் தரப்பில் புலிகள் இயக்கம் ஒத்துழைப்புத் தராமையினால் தான் பாதை திறக்க முடியவில்லை என்னும் பிரசாரத்தையே செய்து வருகின்றது. ஆனால் ராணுவம் முன்வைத்துள்ள பாதைக்கான நிபந்தனைகளில் ராணுவ உள்நோக்கங்களே பொதிந்து காணப்படுகின்றன. அந் நிலையால் வன்னி மக்கள் கடுமையான உணவு மருந்து எரிபொருள் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். வயதானோரும் குழந்தைகளும் நோய்களுக்கு ஆளாகி உள்ள அதே வேளை மருந்து தட்டுப்பாடு மோசமாகி உள்ளது. இதுவரை மேலதிக சிகிச்சைக்கு வவுனியா வர முடியாமையால் பத்துக்கு மேற்பட்ட நோயாளிகள் மரணமடைந்துள்ளனர். வன்னி மக்களை பட்டினி போட்டு விரக்தியடையச் செய்வதன் மூலம் புலிகளுக்கு எதிராக அவர்களைத் திருப்ப முடியும் என்றதப்புக் கணக்கிலேயே அரசாங்கமும் ராணுவமும் பாதைத் திறப்பை இழுத்தடித்து வருகின்றது என்பதே உண்மையானதாகும்.

## புதிய இடதுசாரி முன்னணிக்குள் கருத்து வேற்றுமை

புதிய இடதுசாரி முன்னணிக்குள் கடுமையான கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணமாக அமைந்தவர்கள் நவசமசமாஜக் கட்சியும் அதன் தலைவர்களுமேயாவர். கடந்த மாகாண சபைத் தேர்தலில் முன்னணி சார்பாக கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றவர் விக்கிரமபாகு கருணாரத்தினா. அந்த வெற்றிக்குப் பின் அவர் தான் தோன்றித்தனமாக நடந்து கொள்ள ஆரம்பித்தார். மாகாணசபையின் சபை முதல்வர் (சபாநாயகர்) பதவியை ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் பெற்றுக் கொள்ள முயன்றார். முன்னணியின் முடிவின்றி செயல்பட்ட அவரது முயற்சி இறுதிநேரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் கோபமடைந்த அவர்கள் முன்னணிக்குள் நவ சமசமாஜக் கட்சியின் தனிக் கட்சி ஆதிக்கத்தையும் த்னிநபர் அகங்காரப் போக்கையும் திணிக்க முனைந்தனர். இதனை முன்னணியில் உள்ள ஏனைய கட்சிகள் வன்மையாக எதிர்த்து நின்றன. அத்துடன் கூட்டுத் தலைமையை வற்புறுத்திய கட்சிகள் ஏற்கனவே நவ சமசமாஜக் கட்சியிடம் இருந்த முன்னணியின் செயலாளர் பதவியினை புதிய ஜனநாயக கட்சியிடம் வழங்குமாறு ஆலோசனை வழங்கினர். வருடா வருடம் செயலாளர் பதவி ஒவ்வொரு கட்சிக்கும் சென்றடைய வேண்டும் என்ற முன்னணியின் அமைப்பு விதிகளுக்கு அமைய தோழர் இ.தம்பையாவின் பெயரை ஏனைய கட்சிகள் முன் மொழிந்து வழிமொழிந்து புதிய செயலாளரை தெரிவு செய்து கொண்டன. இதனை நவ சமசமாஜக் கட்சி மட்டும் ஏற்றுக் கொள்ளாது எதிர்த்தது.

இச் சூழல் காரணமாக நவ சமசமாஜக் கட்சி தனது குறுகிய பதவி ஆசை அதிகாரித்துவ ஆணவப் போக்கு என்பனவற்றை கைவிடாது புதிய இடதுசாரி முன்னணியில் இருந்து ஒதுங்கியுள்ளது. அதே வேளை புதிய ஜனநாயக கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, தேசிய ஜனநாயக இயக்கம். தியச அமைப்பு என்பன தொடர்ந்தும் புதிய இடதுசாரி முன்னணியைப் பலப்படுத்தி முன்னெடுக்க திடசங்கற்பத்துடன் செயலாற்றி வருகின்றன.

## உண்மையும் ஊடகங்களும்

பத்திரிகைச் சுதந்திரமென்பது பணக்காரர்களது சுதந்திரம் என்ற கருத்தில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்படுகிறது. பத்திரிகை முதலாளிகளைப் பொறுத்தவரை, வர்க்கநலன்கள், வியாபார இலக்கு என்ற இரண்டையும் பாதிக்காத விதமாகச் சவாரி செய்யவே பத்திரிகை வாகனத்தைப் பயன்படுத்த முற்படுகின்றனர். நேர்மையான பத்திரிகைகள் இருந்திருக்கிறார்கள். சிலர் இன்னமும் இருக்கிறார்கள். ஆனாலும் பலரால் பத்திரிகை முதலாளிகளது நெருக்குவாரங்கட்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. பத்திரிகைத் தொழில் மட்டுமே சீவனோபாயம் ஆகி விட்டால், ஒரு சில முதலாளிகளின் பூரண ஆதிக்கத்தில் உள்ள தேசிய செய்தி ஊடகச் சூழலில் சுதந்திரமான செயற்பாடு இயலாத காரியமே.

இந்திய மேலாதிக்கத்திற்கு ஆதரவாக எழுதுவதில் நமது தமிழ் ஏடுகட்குப் பெரும் உற்சாகம். 1987–89 நினைவுகளை மறந்து இந்திய மேலாதிக்கக்காரர்கட்கு ஆதரவாகவே செய்திகள் பலகாலமாக எழுதப்பட்டு வந்தன. இந்தியாவின் அணு ஆயுதப் பரிசோதனையை நியாயப்படுத்தி அதை ஒரு சாதனை என்று பாராட்டிய தமிழ் ஏடுகள், பாகிஸ்தானின் அணுஆயுதப் பரிசோதனைகள் பற்றி அதே விதமாக எழுதத் தயக்கம் காட்டின. இந்திய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சீனாவை இந்தியாவின் எதிரி என்று தாக்கிய போது ஆமா போட்ட பத்திரிகைகள் இந்திய அரசாங்கம் அதிலிருந்து நழுவப் படாதபாடு பட்ட போது வாயடைத்து விட்டன. இன்று காஷ்மீர் தொடர்பாக பாகிஸ்தான் ஊடுருற்காரர்கள் என்று வாய் கூசாமற் பேசுகிற தமிழ்க் செய்தியாளர்கள் இந்திய அரசின் செய்திகளையும் சொற் பிரயோகங்களையும் வெட்கமின்றிப் பயன்படுத்தி வருகின்றன. காஷ்மீரில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் நடப்பதையோ அங்கு இந்திய ஒடுக்குமுறை இருப்பதையோ மறந்து பயங்கரவாதி, ஊடுவற்காரர் என்ற சொற்களைப் பாவிப்பவர்கள், இதே ஆணுகுமுறையை இலங்கை அரசாங்கம் தமிழ்த் தேசியஇன விடுதலைப் போராட்டம் தொடர்பாகப் பயன்படுத்தும் போது ஏன் அதை ஏற்கத் தயங்குகிறார்கள்? தமிழ்ப் பத்திரிகை முதலாளிகள் எவருமே தமிழ் இன விடுதலை பற்றிய அக்கறை உள்ளவர்கள் என்று நாம் நம்ப வேண்டியதில்லை. ஆயினும் பத்திரிகை வியாபாரத்திற்குப் பழுது வராத விதமாகவே செய்திகளும் செய்திகள் மீதான கருத்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

சிங்கள ஏடுகளின் அணுகுமுறையில் இதேவிதமான போலித்தனத்தின் இன்னொரு கோணத்தை நாம் காணுகிறோம். பெரும்பாலான ஆங்கில ஏடுகளில் கடைந்தெடுத்த இனவாத விஷமத்தனம் கோலோச்சுகிறது. இதன் ஒட்டுமொத்த விளைவு என்ன? மேலும் பிளவுபட்டு நிற்கின்றனர்.

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பார்கள். கூத்தாடிகள் பத்திரிகை முதலாளிமார் மட்டுமல்ல, அவர்களது சேவையால் பயன்பெறுகிற போரின் எசமானர்களும் தான். ஆனாலும் பொதுமக்களை நீண்டகாலத்துக்கு ஏமாற்ற முடியாது. என்றோ ஒரு நாள் ஊடகங்களை மீறி உண்மைகள் மக்களைச் சென்றடையத்தான் போகின்றன. அது வரை இப் பத்திரிகை நிறுவனங்கள் தமது செய்தித் திரிப்பு வேலைகளைத் தொடரலாம்.

வெளியீடுபவர் : இளையதம்பி தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சகம் : யு.கே. பிரின்டஸ் 26/1, ஸ்ரீ சிவானந்த வீதி, கொழும்பு 13, இலங்கை.